விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி22 வெள்ளிக்கிழமை (08.11.2002) தொலைபேசி- 2223378 ஒலி 324

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## தலைவர் பிரபாவுக்கு 200 வருட சிறைத்தண்டனையா?

# நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டித்து

# யாழில் இன்று மாபெரும் பேரணி!

## இலட்சக்கணக்கான மக்கள் அணி திரள்வர்

**இலங்கை மத்திய வங்கி குண்டு வெடிப்பு வழக்கில், தமிழீழ விடுதலைப் புலிகள அமைப்பின் தலைவர் வே. பிரபாகரனுக்கு இருநூறு ஆண்டுகள் கடூழியச்சிறைத் தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பை ஆட்சேபித்து, இன்று யாழ்குடாநாடு தழுவிய வகையில், மாபெரும் கண்டனப் பேரணி இடம் பெறவுள்ளது.**

பேரணிக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளதாகவும், பேரணியில் கலந்து கொள்ளும் பொது மக்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், யாழ மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

முற்பகல் 10மணிக்கு யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் திரளும் மக்கள், அங்கிருந்து பலாலி வீதி, யாழ் ஸ்ரான்லி வீதி, ஆஸ்பத்திரி வதி ஊடாக யாழ் கச்சேரியை சென்றடையவுள்ளனர்.

சமாதான முயற்சிகள் கனிந்து வரும் இவ் வேளையில், தலைவர் பிரபாகரன் மீது விதிக்கப்பட்டிருக்கும் தீர்ப்பை ஆட்சேபித்தும், அதற்கு தமிழ் மக்களின் விசனத்தை வெளிபடுத்தும் வகையிலும், இடம்பெறும்

(10ம் பக்கம் பார்க்க)

## ஜப்பானியத் தூதுக்குழு தென்மராட்சிக்கு விஜயம்

(திருநெல்வேலி)

யாழ் குடாநாட்டுக்கு விஜயம் செய்துள்ள ஜப்பாணிய உயர் மட்டத் தூதுக் குழுவினர் நேற்று தென்மராட்சிக்கு விஜயம் செய்து, போரினால் ஏற்பட்ட அழிவுகளை நேரில் பார்வையிட்டனர்.

ஜப்பானிய சமாதானத் தூதுவர் ஆகூஸி அக்ஸி மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமானப் பணிக்குப் பொறுப்பான ஜப்பான் நாட்டுப் பிரதிநிதி, மெட்சிக்கோ ஒட்சுகா ஆகியோர் அடங்கிய ஜப்பானியத் தூதுக்குழுவினர், கொடிகாமம் சாவகச்சேரிப் பகுதிகளைப் பார்வையிட்டதுடன், சாவகச்சேரியில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இதே வேளை பிற்பகல் 5மணிக்கு சுன்னாகம் சபாபதிப்பிள்ளை நலன்புரி முகாமிற்குச் சென்ற ஜப்பானியத தூர்துக்குழுவினர், அங்கு தங்கியிருக்கும் இடம் பெயர்ந்த மக்களின் தேவைகளையும் கேட்டறிந்து கொண்டனர்

(இ-43-77)

## எதிர்க் கட்சிகளின் கருத்துக்களுக்கு அமைச்சர்கள் மதிப்பளிக்க வேண்டும்

### பாராளுமன்றில் சபாநாயகர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் அமைச்சரவை அந்தஸ்துப் பெற்ற மற்றும் அந்தஸ்து பெறாத அமைச்சர்கள், மற்றவர்களின் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும் என சபாநாயகர் யோசப் மைக்கல் நேற்று நடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

அரசின் இரண்டாவது வரவு செலவுத்திட்டம் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்த பொது ஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் டி.எம்.ஜயவர்த்தனா உரையாற்றிக் கொண்டிருந்த வேளை அரசின் உறுப்பினர்கள் அடிக்கடி குறுக்கிட்டு கேள்விகளை கேட்டுக் கொண்டிருந்தனர்.

இதனை உற்று அவதானித்துக் கொண்டிருந்த சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து, தெரிவிக்கையில்:-

அரசாங்கத்தின் கொள்கை தொடர்பாக எதிர்க்கட்சியினர் கூறும் கருத்துக்களை செவிமடுப்பது

(10ம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தூதுக்குழு யாழ் வரும்

இந்திய உயர் மட்டத் தூதுக் குழுவினர் யாழ்ப்பாணம் வருகை தரவுள்னர்.

இக்குழுவினர் யாழ்குடாநாட்டு அபிவிருத்தி தொடர்பாக ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இக்குழுவில் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகரும் இடம் பெறுகின்றார். (இ-43)

## க.பொ.த (சா) முன்னோடிப்பரீட்சை இன்று நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில், தரம் பதினொன்று மாணவர்களுக்கு நடைபெறும் முன்னோடிப் பரீட்சை, இன்று நடை பெறமாட்டாதென்று, யாழ் கல்வி வலயம் அறிவித்துள்ளது.

இன்று நடை பெறவிருந்த

(10 பக்கம் பார்க்க)

மன்றில் தெரிவித்துள்ளார்.
அரசின் இரண்டாவது வரவு

களை கேட்டுக் கொண்டிருந்தனர்.
இதனை உற்று அவதானித்துக்

(10ம் பக்கம் பார்க்க)

பெறுகின்றார். (இ-43)

## ரணில் - பாலா ஒஸ்லோவில் சந்திப்பர்

# சமாதான முயற்சிக்குத் தடையாயின்

# இடைக்கால நிர்வாகம் கைவிடப்படும்

## அரசும் புலிகளும் இணக்கம்: அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**இடைக்கால நிர்வாக சபை அமைப்பது தொடர்பான விடயத்தை சமாதானப் பேச்சுவார்த்தையில் வலியுறுத்தாமல் அரசியல் தீர்வு குறித்து பேசுவதற்கு அரசும், தமிழீழ விடுதலைப்புலிகளும் நடத்தி முடித்த தாய்லாந்துப் பேச்சுவார்த்தையில் இணக்கம் கண்டுள்ளன.**

**நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடை பெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் ஒரே குரலில் நிதியுதவி கோரப்போவதாகவும் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எஸ்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

தாய்லாந்தில் இடம்பெற்ற இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக விளக்கம் அளிக்கும் போதே அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு ஒன்றை அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று நடத்தியிருந்தார்.

அம் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

**அரசியல் தீர்வே முக்கியம்:**

தற்போது நடைபெற்றுக் கொண டிருக்கும் சமாதான முயற்சிகளினூடாக ஸ்திரமான அரசியல் தீர்வொன்றைக காண்பதே அரசினதும் விடுதலைப்புலிகளினதும் முக்கிய நோக்கமாகும்.

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வட-கிழக்கு அபிவிருத்தியில் மட்டுமே அரசாங்கம் முனைப்பாக உள்ளது

## டி.எம்.ஜயரத்தின அவையில் சர்ச்சை

(கொழும்பு)

நாட்டைப் பிளவுபடுத்தாமல் அரசாங்கம் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லுமானால் அதுவிசேட அம்சமாக கருதப்படும் என பொதுஜன ஐக்கியமுன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் டி.எம்.ஜயரத்ன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

வரவுசெலவு திட்டம் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

ஐக்கியதேசிய முன்னணி அரசின் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக மக்கள் மத்தியில் சிலசந்தேகங்கள் எழுந்துள்ளன.

இவ் அரசாங்கம் வடக்கு கிழக்குபகுதிகளைஅபிவிருத்தி செய்வதிலேயே முனைப்பாக உள்ளது இதனால் ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு அரசுஅநீதிஇழைக்கின்றது எனவும் கண்டிக்கும் தொனியில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தற்போதுயுத்தம் நிறுத்தப்பட்டதனால் வரவு செலவுத்திட்டத்தில் மிகுதியாக இருக்கும் 3ஆயிரத்து 500கோடி ரூபாவினை கொண்டு அரசு அபிவிருத்திக்காக எவ்வாறான சேவைகளை மேற்கொள்ளவுள்ளது என அவர் அங்குகேள்விஒன்றையும் எழுப்பியுள்ளார்.

இவ்வரவுசெலவுத் திட்டத்தில் சாதாரண மக்களுக்காக தொழில்வாய்ப்புக்களை உருவாக்கவில்லை எனவும்,

மக்களை பட்டினியில் வாடச்செய்து நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது எனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

# கொழும்பு மாநகரசபை தீயணைப்பு பிரிவினர் யாழ்ப்பாணம் வருவர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை தீயணைப்பு படைப்பிரிவினருக்கான பயிற்சிகளை வழங்குவதற்காக கொழும்பு மாநகர சபையின் தீயணைப்புப்படையினர் எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதியாழ்ப்பாணம் வருகைதரவுள்ளனர்.

யாழ் மாநகரசபையின் தீயணைப்பு படைப்பிரிவினருக்கு அத்துறை சார்ந்தபயிற்சிகளை வழங்குவதற்கு தேவையானதீயணைப்புகருவிகளையும் இவர்கள் கொழும்பில்இருந்து எடுத்து வரவுள்ளனர். (உ-6,16)

# பேரணியில் கலந்துகொள்ள ஊழியர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு மேல்நீதிமன்றத் தீர்ப்பை ஆட்சேபித்து இன்று யாழ்குடாநாட்டில் இடம் பெறும் கண்டனப்பேரணியில் யாழ்பல்கலைக்கழக ஊழியர்சங்க அங்கத்தவர்களைக் கலந்து கொள்ளுமாறு யாழ்பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வேண்டுகோள்விடுத்துள்ளது.

ஊழியர்சங்க அங்கத்தவர்களை முற்பகல் 10மணிக்கு பல்கலைக்கழக இராமநாதன் மண்டப முன்றலில் ஒன்று கூடுமாறும் நீர்மின்வினியோகம், பரீட்சை நிலையங்களில் கடமையாற்றுவோர் மற்றும் பாதுகாப்பு ஊழியர்கள் இதில் கலந்துகொள்ளத் தேவையில்லை என்றும் ஊழியர்சங்கம் தெரிவித்துள்ளது. இ)

---

## இன்றைய

மன்றத் தீர்ப்பு வந்திருக்க முடியாது.

எனவே, ஸ்ரீலங்கா அரசு இந்த விடயத்தில் மிகத்தெளிவான அர்ப்பணிப்புடனுமான நடவடிக்கைகளை எடுத்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்து அதன்கீழ் வழங்கப்பட்ட, வழங்கபபடவிருக்கும் தண்டனைகளை இரத்துச் செய்வதன் மூலம் இவ்விடயத்திற்கு சுமுகத் தீர்வுகாண வேண்டுமென்று நாம் வலியுறுத்தி நிற்பதற்கு இந்தப் பேரணிவலுச் சேர்ப்பதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

### யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம்

தேசியத்தலைவர் பிரபாகரனுக்கு 200 வருடச் சிறைத் தண்டனை வழங்கியிருப்பதானது தமிழர் மனங்களை புண்படுத்தியுள்ளது.

இத்தீர்ப்பைக் கண்டித்து இன்று இடம்பெறும் பேரணியில் பங்குகொள்ளும்வகையில் யாழ். மாவட்டத்தில்உள்ள சகல சிகைஒப்பனை நிலையங்களையும் மூடி பரமேஸ்வராச்சந்தியில்உள்ள தாசன் சிகைஒப்பனை நிலையம் முன்பாகமு.ப.10.00மணிக்குமுன்னர் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொளகிறோம்.

### தீவக மக்கள்நலன்காப்பகம்

கொழும்பு மத்தியவங்கி குண்டுவெடிப்புத் தொடர்பான வழக்கில் தமிழ் தேசியத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு உயர் நீதிமன்றம்அளித்த தீர்ப்பை இவ்வேளையில் தீவக மக்கள் நலன்காப்பகம் தீவக மக்கள்சார்பில் மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

இத் தீர்ப்பை மிக மிக வன்மையாக தீவக மக்கள்சார்பில் தீவக மக்கள் நலன்காப்பகம் கண்டித்துள்ளது. அத்துடன் இன்று நடைபெறும் யாழ். குடாநாடு தழுவிய மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியில் தீவக பொதுமக்களும், பொது அமைப்புகளும் ஒன்றுதிரண்டு தீர்ப்புக்கெதிரான ஆட்சேபத்தை ஒரேகுரலில்வெளிப்படுத்துமாறு தீவக மக்கள் நலன்காப்பகம் தீவக மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கின்றது. (உ)

# இராசி பலன்

8-11-2002
(ஐப்பசி 22,வெள்ளி)
சதுர்த்தி மு-இ 8 04வரை
மூலம் பி.இ 2 09வரை
இராகுகாலம் -10 35-12 05
நல்லநேரம் 6,05-7 35
சதுர்த்திவிரதம், நான்காம் ஐப்பசி வெள்ளி

**மேடம்**
புதிய திட்டமிடல், முயற்சிகைகூடும், திடீர்பயணம், உடல்சோர்வு

**இடபம்**
வாகனபயம், காரியதடங்கல், நண்பர்கள் மனஸ்தாபம் உடல்நலக்குறைவு,

**மிதுனம்**
குடும்பமகிழ்ச்சி, தனவரவு தேகநலன், காரியசித்தி

**கடகம்**
முயற்சிகைகூடும், செய்தொழில்முன்னேற்றம், நோய்குணமடைதல், கற்பனைமிகுதி

**சிங்கம்**
சிறுவியாதி, மனத்தாங்கல் சகோதரர்உதவி, முயற்சி தாமதம்

**கன்னி**
உடல்சோர்வு, செல்வாக்கு குறைவு,காரியதாமதம், உறவினர் சந்திப்பு

**துலாம்**
நல்லமுயற்சி, நண்பர்கள் சந்திப்பு, பொருள்சேர்க்கை, இனியசம்பவம்

**விருச்சிகம்**
கடுமையான வார்த்தை, எதிர்பாராத நன்மை,முயற்சி தாமதம்,தனவிரயம்

**தனுசு**
தெய்வசிந்தை, காரியசித்தி தொழில்முன்னேற்றம்,சயனசுகம்

**மகரம்**
காரிய அலைச்சல், நண்பர்கள் உதவி, சயனசுகக்குறைவு அபகீர்த்தி

**கும்பம்**
தெய்வதரிசனம், காரியசித்தி, பெரியோர்சந்திப்பு, பொருள்சேர்க்கை

**மீனம்**
அதிகபிரயாசை, பிற உதவி, நல்லசெய்தி, முயற்சி கைகூடும்

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).

வளவன்

# வேலணைதுரைசாமி ம,ம.வி வீதி நேற்றுதிறக்கப்பட்டது

(கொக்குவில்)

படையினரால் போக்குவரத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்த வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலயத்திற்குச் செல்லும் வீதி நேற்று வேலணை கடற்படையினரால் திறந்துவிடப்பட்டது.

இவ் வீதி மூடப்பட்டிருப்பதால் ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் போக்குவரத்துச் செய்வதில் அசௌகரியங்களை எதிர்நோக்குவது குறித்து பாடசாலைச் சமூகம் மற்றும் பொது அமைப்புக்களால் படைத்தரப்புக்கு பல தடவைகள் வலியுறுத்தப்பட்டது.

இதன் அடிப்படையில் மேற்படி வீதி திறக்கப்பட்டதெனினும் மாணவர்களும் ஆசிரியர்களும் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்ற அதேவேளை பொது மக்களை போக்கு வரத்துக்கு அனுமதிப்பது தொடர்பாக பரிசீலிக்கப்படுமென்று தீவக கடற்படை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (இ-243)

# இலங்கைத்தமிழர்க்குஉதவிட சென்னையில்தகவல்மையம்

### உ. த. பே. தலைவர் நடவடிக்கை

(கொழும்பு)

கடந்தகால யுத்தங்கள் காரணமாக வடக்கு-கிழக்கில் கடுமையாகப் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாகியுள்ள மக்களின் துயர் துடைக்கும் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக உலகத் தமிழர் பேரவையின் தலைவர் டாக்டர் ஜனார்த்தனன் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளார்.

மக்களுக்கு அரசினால் பண உதவிகள் வழங்கப்பட்டாலும் சமாதான முன்னெடுப்புகளுடன் சமூக நிலைக்கு திரும்பிக் கொண்டிருக்கும் இந் நிலையில் அவர்களுக்கு மனிதாபிமான உதவிகளே தேவைப்படுகின்றன.

இந்த வகையில் தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில் ஒரு தகவல் மையம் அமைத்து அகதிகளாக இலங்கைத் தமிழர்களுக்குத் தேவையான மனிதாபிமான உதவிகளை, புலம்பெயர்ந்துள்ள மக்களிடமிருந்து பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையில் இறங்கவுள்ளேன் என்று ஜனார்த்தனன் தெரிவித்துள்ளார்.

தமிழ் அமைப்புகள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இதுபற்றித் தெரிவிக்க வுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள டாக்டர் ஜனார்த்தனன், அரசு-புலிகள் பேச்சுவார்த்தை குறித்து வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் பெரிதும் எதிர்பார்ப்புடன் இருக்கின்றனர். பேச்சுக்கள் மூலம் நிதானமாகவும் தாமதமாகவும் சரியான இலக்கை நோக்கிச் செல்ல வேண்டும் என்பதையே அவர்கள் விரும்புகிறார்கள்.

குறிப்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ. தே. முன்னணியும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றன என்றும் தெரிவித்துள்ளார். (உ-7)

# மேல்நீதிமன்ற தீர்ப்புக்கு கல்விச் சமூகம் கண்டனம்

### கல்வி மேம்பாட்டுப் பேரவை அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் இன்று இடம்பெறும் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணிக்கு ஆதரவு தெரிவித்து, யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

தமிழீழத் தேசியத்தலைவர் வே பிரபாகரன் அவர்களுக்கு நீதிமன்றம் விதித்துள்ள 200 ஆண்டுச் சிறைத் தண்டனை செய்தி தமிழ் நெஞ்சங்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. புரிந்துணர்வு அடிப்படையில் சமாதானப் பேச்சு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது இத்தகைய செய்தி தமிழ் மக்கள் மனத்திலே அச்சத்தினை ஊட்டுவதாக அமைகின்றது. அதேவேளையில் அரச படைகள் செய்த படுகொலைகள் எந்த நீதிமன்றிலும் ஏறாமலிருப்பதைக்கண்டு மிகுந்த வேதனையும் ஏமாற்றமும் அடைகிறோம்.

நாகர் கோயிலில் ஒரு பாடசாலையில் பிஞ்சு மாணவக் குழந்தைகள் துடிதுடித்துச் சாவைத் தழுவும்படி குண்டு வீசிய விமானத்தை ஏவியவர்களுக்கு என்ன தண்டனை வழங்கப்பட்டது? கிருஷாந்தி என்னும் மாணவி சிறுகடையிலே சென்றபோது அவளையும் அவள் குடும்பத்தினரையும் படுகொலை செய்தவர்களுக்கு என்ன தீர்ப்பு வழங்கபபட்டது? தமிழ் மாணவர்கள் கல்வி கற்க முடியாதபடி பள்ளிகளையெல்லாம் குண்டு வீசி அழித்தவர்கள் தண்டிக்கப்பட்டார்களா? இவற்றை அரசின்கவனத்திற்குகொண்டு வருகிறோம். இத்தகைய பாரதூரமான தீர்ப்பு இந்த வேளையிலே வழங்குவது சமாதான முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிப்பதாகலாம். யாழ்ப்பாண மாவட்ட கல்விப் பேரவை இத்தீர்ப்பினையிட்டு மிகுந்த மனவேதனை அடைவதுடன், கடும் ஆட்சேபனையையும் தெரிவித்து, அத்தண்டனையைஉடன் நீக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

# 70 வயதில் ராஜா மரணம்

(கொழும்பு)

கண்டி தலதாமாளிகைக்கு சொந்தமான ஹயின்துருவே ராஜா என்ற 70வயது யானை நேற்றுமுன்தினம் அதிகாலையில் மரணமடைந்துள்ளது

கடந்த ஒரு வருடமாக நோய்வாய்ப்பட்டிருந்த இந்த யானை, விசேட மிருக வைத்தியர்களின் சிகிச்சைக்குள்ளாக்கப்பட்டு வந்தது

இந்த யானை 1987ஆம் ஆண்டு தொடக்கம் வருடாந்தம் எஸல பெரஹராவில் புனித பேழையை தாங்கிச் செல்வது குறிப்பிடத்தக்கது. (உ- 7)

# கொழும்பு- தூத்துக்குடி கப்பல் சேவை குறித்து முடிவெடுப்பதில் இழுபறி

(கொழும்பு)

கொழும்புக்கும்- தூத்துக்குடிக்கும் இடையிலான கப்பல் சேவை தொடர்ந்தும் இழுபறி நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இக் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்காக இந்திய அரசாங்கத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டிய இறுதி ஒப்பந்தத்தில் இந்திய அரசின் பிரதிநிதி ஒருவர் கைச்சாத்திடாமையே இதற்கான காரணம் என இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் எம்.ஜி எம் முசம்பில் தெரிவித்துள்ளார்.

இந்திய கப்பல் துறை அமைச்சர் இந்த வாரம் இலங்கை வரவிருந்த போதிலும் அது உத்தியோக பூர்வமாக இன்னமும் அறிவிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் கொழும்பில் இருந்து தூத்துக்குடிக்கான கப்பல் சேவையை விரைவில் ஆரம்பிப்பதற்கான சாத்தியம் இல்லைஎனதெரிவித்தார். (8)

# இளைஞர், விவசாயிகள் நலனை இலக்காகக் கொண்ட பட்ஜெட்!

## பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

**நிதியமைச்சர் கே. என், சொக்ஸியினால் நேற்று முன்தினம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் இளைஞர்கள் விவசாயிகளின் நலனைநோக்காகக் கொண்டது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் மாலை பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றஅரச பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் பேசும் போதே பிரதமர் மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

புதிய வரவு செலவுத் திட்டம் மூலம் ஒவ்வொருதேர்தல் தொகுதியிலும் பாரிய அளவிலான அபிவிருத்திகளைமேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்,

இவ்வரவு செலவுத் திட்டத்தின் முதல் நோக்கம் கடன் சுமையை குறைப்பதுவும் தொழில் வாய்ப்பினை ஏற்படுத்துவதுமே என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்;

அத்துடன், புதியதொழில் வாய்ப்பினை உருவாக்குவதற்காக தனியார்துறையினருக்கு இந்தியாவிலிருந்து இயந்திரங்களை கொள்வனவுசெய்வதற்காக குறைந்த நிபந்தனைகளுடன் 6 ஆயிரம் மில்லியன்ரூபா வழங்கப்படவிருக்கிறது இவ்வாறான பல திட்டங்களுக்கு கடன் பெறக் கூடியதாகவும் இருக்குமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்டத்துக்கு புறம்பாக கிராமியப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கும் திட்டங்களுக்காக 3மில்லியன் ரூபாவும், ஆங்கிலம், தொழில் நுட்பக் கல்வி பாடசாலைக் கல்வி அபிவிருத்திக்கு 2 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் பிரதமர் தெளிவுபடுத்தியுள்ளார்:

இதேவேளை இம்மாதம் 25 ஆம் திகதி ஒஸ்லோவிலும், யப்பானிலும் நடைபெறவுள்ள உதவிவழங்கும்மாநாடு மூலம் அபிவிருத்திக்காக மேலும் கிடைக்கும் எனவும்,

இந்நிதி மூலம் வடக்கு-கிழக்கு மாகாணங்களை புனரமைத்து, அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள அரசு தீர்மானித்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க, நிதியமைச்சர் கே.என். சொக்ஸியையும் அங்கு பாராட்டியுள்ளார்.

சுதந்திரமடைந்த பின்னர் இலங்கையின்பொருளாதாரம் முதல் தடவையாக வீழ்ச்சிப் போக்கை நோக்கிச் சென்று கொண்டிருந்தவேளை ஐக்கிய தேசிய முன்னணி அரசின் முதலாவது வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்த ஆறுமாதங்களில் மூன்று சதவீத பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்திய பெருமை நிதியமைச்சர்கே.என்சொக்ஸியைச் சாரும் என்றார்.

இக் கூட்டத்தின் முடிவில் ஐக்கிய தேசியமுன்னணி அரசு சமர்ப்பித்த இரண்டாவது வரவு செலவுத் திட்டத்திற்கு பூரண ஆதரவு வழங்குவதென தீர்மானிக்கப்பட்டதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (உ-8)

## மாணவர்களுக்கு வீதிப் போக்குவரத்து ஒழுங்கு விதிப் பயிற்சி

(சுதுமலை)

யாழ். மாவட்ட மக்கள் நலன்புரிச் சங்கமும் விசேட படையணிகளும் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கு வீதிப் போக்குவரத்து ஒழுங்கு விதிகள் தொடர்பான பயிற்சிகளை வழங்கியுள்ளன;

இப் பயிற்சிகளில் பங்கு கொள்வதற்கென வலிகாமம் மற்றும் வடமராட்சி கல்வி வலயங்களைச் சேர்ந்த 42 பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பயிற்சி பெற்ற மாணவர்கள் தத்தம் பாடசாலைகளின் முன்பாகவுள்ள பிரதான வீதிப் பகுதியில் பாடசாலை ஆரம்பமாகும் வேளையிலும் முடிவுறும் வேளையிலும் வீதிப் போக்குவரத்து ஒழுங்கில் ஈடுபட்டு வருகின்றனர். (உ-252)

## எதிர்வரும் மாதத்தில் பலத்த மழை பெய்யும்

(யாழ்ப்பாணம்)

தற்போதுவட கீழ்ப் பருவக் காற்று வீச ஆரம்பித்திருப்பதால் இக்காற்று எதிர்வரும் மாதத்தில் பலமாக வீசும் போது பலத்த மழை பெய்யும் சாத்தியக்கூறுகள் இருப்பதாக திருநெல்வேலியில் இயங்கும் வளி மண்டல ஆராய்ச்சித் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதத்தில் 190. 9 மில்லி மீற்றர் மழையும், இவ்வாண்டு முதல் பத்து மாதங்களிலும் 737. 4 மில்லி மீற்றர் மழையும் இந் நிலையத்தில் பதிவாகியுள்ளது. (உ-9)

## விதவைகள் மேம்பாட்டு திட்டத்துக்கு 4 இலட்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வசிக்கும் விதவைகள் மேம் பாட்டுத் திட்டத்திற்கென யு.என். எச். சி. ஆர். நிறுவனம் 2 இலட்சம் ரூபாவைஒதுக்கியுள்ளது.

இது தவிர, கட்டுவன் மேற்குவறிய மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டுக்கு ஒரு இலட்சத்து 33 ஆயிரம் ரூபாவும், இளவாலை வடமேற்கு வறிய மக்கள் மேம்பாட்டிற்கு 4 இலட்சம் ரூபாவு ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் அரை நிரந்தர பலநோக்கு மண்டபம் ஒன்று 2 இலட்சத்து 76 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. (உ-6,16)

## படை வீரர்களின் உணவுப் பங்கீட்டில் மோசடி

(கொழும்பு)

வவுனியா இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ வீரர்களுக்கான உணவுப் பங்கீட்டில் இடம் பெற்ற மோசடி தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவை வ கேட்டுள்ளார்.

வவுனியா இராணுவ முகாம் வீரர்களின் உணவு விநியோகத்தில் கோடிக் கணக்கான ரூபாமோசடி இடம் பெற்றுள்ளது கண்டறியப்பட்டுள்ளதுடன்,

இது சம்பந்தமாக பல முக்கிய இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டுள்ளன.

இக் குற்றச் சாட்டில் மேஜர் ஜெனரல்கள் இருவரும, மேலும் பல உயர் அதிகாரிகளும் சம்பந்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் இன்னமும் எதுவித விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை. (உ-8)

## காவலூர் கோட்ட பண்ணிசைப் போட்டி முடிவுகள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைக் கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான பண்ணிசைப் போட்டி அண்மையில் கோட்டக் கல்விப் டணிப்பாளர் க.இரத்தின சிங்கம் தலைமையில் இடம் பெற்றது.

மேற்படி பண்ணிசைப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

பாலர் பிரிவு

முதலாம் இடம்- த;தவக்குமார் தம்பாட்டி அ.த;க; பாடசாலை;

இரண்டாம் இடம்- ஞா. கலைச்செல்வி, காரை நகரி யாழ்ரன் கல்லூரி.

மூன்றாம் இடம்- சி.இராகுலன் காரைநகர் கலாநிதி ஆ; தியாகராஜா ம;ம; வித்தியாலயம்.

ஆரம்பப் பிரிவு

முதலாம் இடம்- அ;ஜீவரஞ்சிதமலர் காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயம்;

இரண்டாம் இடம்- சி.சிவரூபன் அனலை தீவு தெற்கு அ.த.க. பாடசாலை.

மூன்றாம் இடம்- ச;சிவகௌரி காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயம்;

கீழ்ப் பிரிவு

முதலாம் இடம்- உ.சாளினி, நாரந்தனை கணேசா வித்தியாலயம்.

இரண்டாம் இடம்- இ.சிந்துஷா, நாரந்தனை றோ. க. மகா வித்தியாலயம்

மூன்றாம் இடம். வெ.வக்சலா நாரந்தனை றோ;க; மகா வித்தியாலயம்;

மத்திய பிரிவு

முதலாம் இடம்:- ம குணதாஸ் கம்பாட்டி அ;த;க. பாடசாலை,

இரண்டாம் இடம்:- க; கஜந்தினி காரைநகர் கலாநிதி ஆ. தியாஜராஜா ம; ம; வி,

மூன்றாம் இடம்:- யோ; தனுஷியா நாரந்தனை கணேசா;

மேற்பிரிவு

முதலாம் இடம்:- ம; தர்சன் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார்கல்லூரி, கு. பிரவைன் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.

இரண்டாம் இடம்:- து.றஜனிகா காரைநகர்யாழ்ற்றன் கல்லூரி, ச. விஜிதா காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி.

மூன்றாம் இடம்:-மா; சாருகாசன் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, ச. குகதர்சன் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி,

மேற்பிரிவு

முதலாம் இடம்:- இ. திவ்வியா ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, க; கனகராஜி ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி;

இரண்டாம் இடம்:- க;புஸ்பநந்தினி காரைநகர் கலாநிதி ஆ. தியாகராஜா ம. ம. வித்தியாலயம், ச. தவலோசனா காரைநகர் கலாநிதி ஆ. தியாகராஜா ம. ம. வித்தியாலயம்,

மூன்றாம் இடம்:- செ; தாட்சாயினி கரம் பொன் சிறிய புஷ்பமகளிர் வித்தியாலயம், ப. சோபனா கரம் பொன் சிறிய புஷ்ப மகளிர் வித்தியாலயம்;

மேற்படி போட்டியில் முதலாம், இரண்டாம் இடத்தைப் பெற்ற மாணவர்கள் தீவக வலய மட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர்; (உ-75)

## ஜப்பான் தூதுக் குழு ஹக்கீம் சந்திப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது போர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட அனைத்து சமூகங்களினையும் சமமாக நோக்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூர் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொண்டு வந்துள்ள ஜப்பானிய சமாதான தூதுக்குழுவை சந்தித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், நெருக்கடிகள் என்பனபற்றி அமைச்சர் இத்தூதுக்குழுவினரிடம் விளக்கி கூறியுள்ளார்.

நாட்டுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக ஜப்பானிய அரசு வழங்கி வரும் உதவிகளுக்கும் அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, ஜப்பானிய தூதுக்குழுவின் தலைவர் யசுசி அகாசி கருத்து தெரிவிக்கையில்; தாம் வடக்கு-கிழக்கு போன்ற பிரதேசங்களுக்கு நேரடியாக விஜயம் செய்து, பிரதேச மக்களின் தேவைகளை கண்டறிந்து கொண்டதாக தெரிவித்துள்ளதுடன்.

அரசாங்கத்தின் கண்ணிவெடி அகற்றல், மீள் குடியேற்றத்திட்டங்களையும் அவர் வரவேற்றுள்ளார்.

இதற்கு ஜப்பான் தொடர்ந்தும் உதவி செய்யும் என அகாசி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அண்மையில் அம்பாறை மாவட்ட மக்கள், வடக்குபிரதேச புனரமைப்புகள்போன்றுகிழக்குமாகாணத்தில் எதுவும் நடைபெறவில்லை என விசனம் தெரிவித்திருப்பதுவும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## கல்வி நிர்வாக சேவைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள தரம்- 1ஐப் பூர்த்தி செய்த அதிபர்களுக்கான இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சை நாளை சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையில் தோற்றுபவர்களுக்கு 1மணிநேர பொது உளச்சார்பு பரீட்சை நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ- 10)

கூட்டமைப்பு மூலம் பதவிக்கு வர முயலும்

# பெனாஸிர் கட்சியை முறியடிக்க இராணுவ ஆட்சி பெருமுயற்சி

## நாடாளுமன்ற அமர்வை பிற்போட்டனர்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் இராணுவ அரசாங்கம் நாடளுமன்ற அமாவுகளின் ஆரம்பத்தை ஒரு நாள் பின் தள்ளிப்போட்டுள்ளது.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் பெர்வேஷ் முஷாரப் தலைமையில் நேற்று முன்தினம் கூடிய அமைச்சரவையில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாக பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இராணுவ ஆட்சியை எதிர்க்கும முன்னாள் பிரதமர் பெனாஸிா பூட்டோவின் கட்சிக்கும் இஸ்லாமியக் கூட்டமைப்பு ஒன்றிற்கும் இடையிலான கூட்டணி உருவாகும் சாத்தியக்கூறு இருப்பதாக சந்தேகங்கள் எழுந்தமையே இவ்வமர்வு பிற்போடப்பட்டதற்கான காரணம எனக். கருதப்படுகின்றது.

இவ்வாறு இருதரப்பும் இணைந்தால் தேசியப் பாராளுமன்றில் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வார்கள் என்பதுடன இஸ்லாமியக் கூட்டமைப்பின் தலைவரான பெஷருல்ரகுமான் என்பவர் பிரதமராகத் தெரிவு செய்யப்படக்கூடிய இணக்கப்பாடும் ஏற்பட்டிருப்பதாக இராணுவ ஆடசியிாளர்கள் சந்தேகிக்கின்றனர். (4)

பட்டினியால் வாடும் மக்களுக்கு உதவுவதில்

# அமெரிக்காவின் அசமந்தம் சிம்பாவே கடும் சீற்றம்

(ஹராரே)

அமெரிக்க அரசிற்கு போர்ப்பித்து பிடித்துள்ளது அதனால் சிம்பாப்வேயின் இறையாண்மையை எச்சரித்து வருகின்றது என்று சிம்பாவே அரசு அமெரிக்கா மீது கடும் சீற்றத்தை வெளிப் படுத்தியுள்ளது.

சிம்பாப்வேயில் பட்டினியை எதிர் நேக்கியுள்ள பல லட்சக் கணக்கான மக்களிற்கு உணவு உதவி வழங்குமாறு அவசர வேண்டுகோள் ஒன்றை சிம்பாவே விடுத்திருந்தது அதற்கு அமெரிக்க அதிகாரி ஒருவர் பதிலளிக்கையில் அவ்விடயம் தொடர்பாக அமெரிக்கா தற்போது ஆராய்ந்து வருகின்றதென சிம்பாப்வே அரசிடம் தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளித்தபோதே சிம்பாப்வே அரசு அமெரிக்காவிற்குப் போர்ப்பித்து பிடித்துள்ளது அதனால் பட்டினியால் வாடும் மக்களை இந்த வகையில் உதாசீனம் செய்கின்றது எனவும் தெரிவித்துள்ளது. (2)

ஹிட்லரின் மூழ்கடிக்கப்பட்ட

# கப்பலில் இருந்து எண்ணெய் கசிகிறது

(ஒஸ்லோ)

கடலுக்கடியில் கிடக்கும் அடோல்ப் ஹிட்லரின் பாரிய யுத்தக் கப்பலான புறுட்ஸரின் சிதைவுகளில் இருந்து எண்ணெய்த் தாங்கி உடைந்து கசிவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இக்கப்பல் 2ஆவது உலக யுத்தத்தின் போது நோர்வேயை ஜேர்மனி ஆக்கிரமித்த சமயம் கடலில் மூழ்கியது.

இது பற்றி மேலும்' தெரிய வருவதாவது 62ஆண்டு காலமாக 90 மீற்றர் ஆழத்தில் கடலின் அடியில் காணப்படும் 208 மீற்றர் நீளமான இக்கப்பலில் 20 தொடக்கம் 30தொன் வரயிலான எண்ணெய் இருப்பதாக நோர்வேயின் சுற்றாடல் மாசடைதல் குறித்து கண் காணிக்கும் அமைப்பின் ஆலோசகர் தகவல் வெளியிட்டுள்ளார்.

இக்கப்பலிலிருந்து 1994 ஆம் ஆண்டு பெருமளவான எணணெய் வெளியே எடுக்கப்பட்டதாக அவர் மேலும் கூறினார். (4)

# புஷ்ஷின் கட்சிக்கு அமோக வெற்றி

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் நேற்று முன்தினம் நடைபெற்று முடிந்த இடைத்தேர்தலில் அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் குடியரசுக் கட்சி அமோக வெற்றியீட்டியுள்ளது.

இதேவேளை செனற் சபையானது மக்கள் ஜனநாயக கட்சியிடமிருந்து குடியரசு கட்சியிடம் மாறியுள்ளதெனவும் இது அமெரிக்கா அதிபரிற்கு கிடைத்த வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியெனவும் தெரிவிக்ப்பப்பட்டுள்ளது.

கடல் கொள்ளை விபத்து கடத்தல் தொடர்பான

# 15 நாடுகளின் மகாநாடு சென்னையில் ஆரம்பம்

(சென்னை)

சென்னை கோவளம் கடலருகில் 15 நாடுகளைச் சேர்ந்த கடற்படையினர், கடலோரக்காவல்ப்படையினர் ஆகியோருக்கான 15 நாள் மாநாடு ஒன்று நேற்று ஆரம்பமாகியுள்ளது.

கடலில் விபத்துக்குள்ளாகும் கப்பல்களை காப்பாற்றுதல் கடற்கொள்ளைகளைத் தடுத்தல் கடத்தல் நடவடிக்கைகளை முறியடித்தல் போன்ற பல்வேறு விடயங்கள் இங்கு விரிவாக ஆராயப்படவுள்ளன.

மேலும் கடற்பிராந்தியங்களில் செயற்கைக்கோள் பயன்படுத்துவது பற்றியும் விவாதிக்கப்படவுள்ளது.

இதே வேளை, இம் மாநாடு முடிவடைந்த பின் இந்தியக் கடலோரக்காவல் படையும் ஜப்பானிய கடலோரக்காவல் படையும் இணைந்து கூட்டுப் பயிற்சியில் ஈடுபடவுள்ளன. (4)

காவிரிநீர் ஆணைக்குழு

# கூட்டத்தில் கலந்துகொள்ள ஜெயலலிதா நிபந்தனை

(சென்னை)

காவிரிப் பிரச்சினை தொடர்பாகப் புதிய நிபந்தனைகளைத் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளார்.

எதிர் காலத்தில் தமிழக அரசு காவிரி ஆணைக் குழுவின் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டுமானால் தமது தீர்மானங்களை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

காவிரி நதி நீர் ஆணையத்தை கூட்டுமாறு கர்நாடக அரசு கேட்டுள்ள நிலையில் இத் தீர்மானங்கள் அடங்கியுள்ள கடிதம் ஒன்றையும் ஜெயலலிதா அடல் பிஹகாரி வாஜ்பாயிக்கு அனுப்பியுள்ளார்.

நிர்ணயிக்கப்பட்ட செயற்றிட்டத்துடன் மட்டுமே காவிரி நதி நீர் ஆணையத்தின் கூட்டம் இடம் பெற வேண்டும் என்ற கோரிக்கை உட்பட 6 நிபந்தனைகளை அவர் தனது கடிதத்தின் மூலம் விதித்துள்ளார்.

உச்ச நீதி மன்றத்தின தீர்ப்பை அரசு முறையாகக் கடைப் பிடிக்கவில்லை யென்றும ஜெயலலிதா அக்கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார். (4)

# இஸ்ரேலியர் இருவரை பலஸ்தீனர் சுட்டுக்கொன்றனர்

(ஜெருசலம்)

இஸ்ரேலிய நகரான ஜெருசலேமில் யூதக்குடியேற்றவாதிகள் இருவரை பலஸ்தீன துப்பாக்கி நபர் சுட்டுக் கொன்றுள்ளார் அந்நபரை இஸ்ரேலியர் பின்னர் சுட்டுக் கொன்றனர்.

யூதக் குடியேற்றத்தில் சட்ட விரேதமாக பிரவேசித்த பலஸ்தீன நபர் யூதக்குடியேற்றவாசிகள் இருவரை சுட்டுவிட்டு தப்பிக்க முயன்றார் என்றும் இவ்வேளை பாதுகாப்பு பிரிவினர் அந்நபர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட போது துப்பாக்கி நபர் கொல்லப்பட்டார் என்றும் இஸ்ரேலிய இராணுவத்தினர் தெரிவிக்கின்றனர்

இதேவேளை, 2000ம் ஆண்டு செப்ரம்பர் முதல் மத்திய கிழக்கு நாடுகளில் நிலவிவரும் வன் செயல்களால் 1646 பலஸ்தீனர்களும் 625 இஸ்ரே வியர்களும் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

## ஐரோப்பியநாடுகளுக்கு அனான் விஜயம்

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகளின் செயலர் கோபி அனான் இம்மாதம் 17ம் திகதி முதல் 9 நாட்கள் திடீர் விஜயமாக ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் ஒன்றை மேற்கொளளவுள்ளார்.

முதற்கட்டமாக போஸ்னியா, குரோசியா, யூகோஸ்லாவிய ஆகிய நாடுகளிற்கு செல்லும் இவர் தொடர்ந்து நெதர்லாந்திற்கும் இறுதிநாளான 26 ம் திகதி பிரான்ஸ் நாட்டிற்கும் சென்று தனது 9 நாட்கள் விஜயத்தை முடித்துக் கொள்வார் என்றும் தெரிக்கப்படுகிறது. (2)

## 4பலஸ்தீனர்களுக்கு இஸ்ரேல் நீதி மன்றம் தண்டனை

(ஜெருசலேம்)

இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட பல குண்டுத்தாக்குதல்களுக்கு காரணமாக இருந்தார்கள் என குற்றஞ் சாட்டப்பட்ட 4 பரஸ்தீனாகளுக்கு இஸ்ரேலிய நீதி மன்றம் நேற்று தண்டனை வழங்கியுளளது.

இவர்கள் 4 பேரும் .ஸ்ரேல் ஜிப்போப்பஸ்கலைக் கழகம் உட்பட பல இஸ்ரேலிய நிலைகள் மீது குண்டுத்தாக்கு தலை நடத்தி பலர் உயிரிழக்க காரணமாக இருந்ததாக இவர்கள் மீது குற்றம் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இஸ்ரேல் நீதி மன்றத்தினால் தண்டனை விதிக்கப்பட்ட பலஸ்தீனர்களுக்கு மரண தண்டனையா அல்லது ஆயுட்காலத் தண்டனையா என்பது குறித்து அடுத்த மாதம் இறுதித் தீர்மானம் எடுக்கப் படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (4)

## குஜராத்தில் மீண்டும் கலவரம்

(புதுடில்லி)

இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் நேற்றுக் காலை இடம் பெற்ற மதக்கலவரத்தில் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

குஜராத்தில் முஸ்லிம்களின் ரமழான்நோன்பு ஆரம்பித்த சில மணித்தியாலயங்களுக்கு முன்னரே இக் கலவரம் ஏற்பட்டுள்ளது.

அஹமதாபாத் நகரில் இக் கலவரம் இடம் பெற்றதாகவும் இங்கு ஏற்கனவே தீபாவளியின் போது இந்துக்கள் பட்டாசு வெடிக்க வைத்தபோது சில முஸ்லிம்கள் எதிர்ப்புத் தெரிவித்ததை யடுத்தே மீண்டும் கலவரம் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்த னர்.

இதே வேளை இவ்வருடத்தின் இங்கு மதக் கலவரத்தின் போது 1000 இற்கும் மேற்பட்டடோர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4)

## உலக அழகிப் போட்டிக்கு வியட்நாமிலிருந்து ஒரு மாணவி

(ஹஹஹனாய்)

இவ்வருடம் நைஜீரியாவில் நடை பெறவுள்ள உலக அழகிப் போட்டிக்கு வியட்நாம் தனது சார்பாகவொரு போட்டியாளரை அனுப்பத் தீர்மானித்துள்ளது.

அடுத்த மாதம் 7 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள உலக அழகிப் போடடிக்கு வியட்நாமில் இருந்து 18 வயதான மாணவியொருவர் செல்வுள்ளார்.

அத்துடன் இப்போட்டியில் வியட்நாம் அங்கீகரிக்கப்பட்டது இவ்வருடம் தான் முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (4)


### கொக்குவில் இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்

எமது கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவர்களில் ஒருவரும் கல்லூரி நலனில் மிகுந்த அக்கறை கொண்டவருமான

**கலாநிதி.T. இராஜசந்திரன்**

அவர்கள் நீண்டகாலத்துக்குப் பின் லண்டனிலிருந்து யாழ்ப்பாணம் வருகைதருகின்றார் என்பதை மிகவும் மகிழ்வுடன் அறியத் தருகின்றோம். அவரைக் கௌரவிக்கும் முகமாக கொ.இ.க பழையமாணவர் சங்கம் 13.11.2002 புதன்கிழமை அன்று ''இராப்போசன விருந்து'' வழங்கத் தீர்மானித்துள்ளது.

எமது கல்லூரி பழையமாணவர்களும், நலன் விரும்பிகளும் இவ் விருந்துபசாரத்தில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். விழாவைச் சிறப்பாக நடத்த ஒவ்வொருவரும் இருநூறு ரூபா அன்பளிப்புச் செய்து உதவுமாறு வேண்டுகின்றோம்.

✳ செயலாளருடன் அல்லது கல்லூரி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இ.செல்வநாதன்
செயலாளர்,
பழையமாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக்கல்லூரி.

T.P: 222 5088 -பழைய மாணவர் சங்க அலுவலகம்.
222 2646 - கல்லூரி அலுவலகம்.
222 2928 - செயலாளர்.


## கொரிய பேச்சுக்கள் பிரச்சினையின்றி ஆரம்பம

(பியோங்யாங்)

வடகொரியாவின் அணு வாயுதத்திட்டம் சர்ச்சைக்குள் ளாகிய நிலையிலும் வட கொரியாவற்கும், தென்கொரியாவிற்கும் இடையிலான பொருளாதாரப் பேச்சுவார்த்தைகள் எந்த வித பிரச்சினையுமின்றி நேற்று ஆரம்பமாகியுள்ளன. தென்கொரிய பிரதி நிதியமைச்சர் தலைமையிலான 35 பேர் கொண்ட தூதுக்குழு பேச்சுவார்த்தைக்காக வடகொரியா சென்றுள்ளது. (4)

## கப்பல் செப்பனிடும் மிதவை மூழ்கியது

இந்தியாவிற்குச் சொந்தமான கப்பல்கள் செப்பனிடும் மிதவையொன்று அந்தமான் தீவின் தலைநகரான போர்த் பிளேரிற்கு அருகில் கடலில் மூழ்கி விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மிதவை தண்ணீர் வெளியேற்றும் பகுதி பழுதடைந்து விட்டதால் அதனை திருத்தும் பணியில் 3 மணி நேரம் கடுமையாக ஈடுபட்டும் மிதவை நீரினுள் மூழ்கிவிட்டதாக கடற்படை அதிகாரி தெரிவித்துள்ளார். (4)

## கம்போடியாவுக்கு 10 மில்லியன் உதவி இந்தியா வழங்கும்

(நாம்பன்)

கம்போடியாவின் உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட இந்தியப் பிரதமர் 4 ஒப்பத்தங்களில் கைச்சாத்திட்டுள்ளார்.

வர்த்தகரீதியான உறவுகளை மேம்படுத்தவும் பொருளாதார மற்றும் தொழில்கல்வியை மேம் படுத்தல் தொடபாகவுமே இந்த 4 ஒப்பந்தங்களையும் இரு பிரதமர்களும் செய்து கொண்டுள்ளனர்.

உலகிலுள்ள ஏழை நாடுகளில் ஒன்றாக காணப்படும் கம்போடியாவிற்கு இந்தியா 10 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவும் தீர்மானித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (2)

# இன்று ஒரு தகவல்

## பாடல்கள் பலவிதம்!

அவிநாசிப் புலவர் என்று ஒருவர் இருந்தார் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வாசுதேவ நல்லூர் தான் இவர் பிறந்த ஊர். ஆனாலும் இவர் அதிகமாக இருந்தது கோயம்புத்தூர் மாவட்டத்தில் இருக்கிற அவிநாசி என்கிற ஊரில் தான். அதனாலேதான் அவிநாசிப்புலவர் என்று இவருக்குப் பெயர். அவிநாசி கருணைபுரிமாலை இவர் எழுதிய நூல். இவருக்கு இசை பாடுவதை விட வசைபாடுவதில் விருப்பம் அதிகம் போலும். இவர் பாட்டைப் படித்துப் பார்த்தால் அப்படித்தான் நினைக்கத் தோன்றுகிறது.

அப்பொழுது இருந்த பணக்காரர் ஒருவரிடம்இவர் போய்ப் பாடியிருக்கிறார். அந்த ஆள் கொஞ்சம் கெட்டியான ஆள் போல இருக்கிறது. ஒன்றும் கொடுக்கவில்லை. போய் விட்டுவா' என்று விட்டார். இசைப் பாடலைக் கேட்டும் பரிசு ஒன்றும் கொடுக்கவில்லையே என்று இவருக்கு மிகவும் கோபம். உடனே இருக்கவே இருக்கிறது வசைப்பாடல். அதைப்பாட ஆரம்பித்து விட்டார். வசைப்பாடல் என்று சொல்வதைவிட அதைவதைப்பாடல் என்று சொல்லலாம். அப்படிப்பட்ட கற்பனை! எப்படி தெரியுமா?

பரிசு கொடுக்காத அந்த ஆளை- அவருக்கு உயிர் இருக்கிற வரைக்கும்நட்டுவக்காலியும்-தேளும் கொட்ட வேண்டுமாம். அதுவும் சும்மா கொட்டக் கூடாதாம். கோபத்தோடு கொட்ட வேண்டுமாம். திருதிரு என்று விழிக்கிற அந்தவிழியில்ஒருகுளவிவந்துகொட்டவேண்டுமாம். அதிலிருந்து இரத்தம் ஆறாகக் கொட்டவேண்டுமாம். இப்படியே போகிறது கற்பனை. அதை நமது வாயால் சொல்லாமல் அவர் எழுதியிருக்கிற பாட்டையே படித்து விடுவோம்.

'சீவனுள்ளளவுமே நட்டுவாக் காலியும்
தேளும் சினந்து கொட்டத்
திருதிரென முண்ட விழியில் குளவி கொட்ட அது
செங்குருதி ஆறு கொட்டப்
பாவிமகனே உனது வாசலில் சாம்பிணக்
கொட்டுகள் வந்து கொட்டப்
பந்தாடி மாரடித்துறவினர்கள் வாய்க்கரிசி
படிநெல் கொணர்ந்து கொட்ட
ஆவலொடு கால்மாட்டில் உனது பெண்டாட்டிகண்
ணருவி யொருகோட்டை கொட்ட
ஐயையோ என் செய்வேன் என்று மகன்நீர் மாலை
அதனைக் கொணர்ந்து கொட்ட
சாவடியில் அறுதாலிகள் கூடியழ நீ வந்து
சப்பாணி கொட்டியருளே!
சண்டிக் குலாமனே வெங்கட்டராமனே
சப்பாணி கொட்டியருளே!

இந்த ஆளுக்கு எவ்வளவு பயங்கரமான கற்பனை பாருங்கள்! கொடுத்தால் ஒரு பேச்சு. கொடுக்கவில்லை என்றால் ஒரு பேச்சு. இந்த நிலைமை அப்போதே இருந்திருக்கும் போல் இருக்கிறது. இருந்தாலும் புலவர் வாக்கு பொய்க்காது என்று சொல்லுவார்கள். இந்தப் புலவர் இந்தப் பாட்டைப் பாடிய கொஞ்ச நாளிலேயே அந்தப் பணக்காரர் போய்ச் சேர்ந்து விட்டார் என்று சொல்கிறார்கள். அது எந்த அளவுக்கு உண்மையென்று நமக்குத் தெரிய வில்லை.

இருந்தாலும் ஒரு விஷயம் மட்டும் நமக்குப் புரிகிறது அதாவது, இந்த மாதிரிப் புலவர்களுக்குப் பயந்து போய்த் தான், அந்தக் காலத்தில் பலர் வள்ளல்களாக இருந்திருப்பார்கள் போல் இருக்கிறது. நமக்கு எதற்கு வீண் வம்பு. பாட்டுப் பாடினால் ஏதாவது இருப்பதைக் கொடுத்து அனுப்பிவைத்து விடுவோமே என்று நினைத்திருப்பார்கள். ஒருவர் கொடுக்கவில்லை என்றால், இவர் மாதிரிக் கோபப் படுகிறவர்களும் உண்டு. சிலர் கோபப் படுவதற்குப் பதிலாகத் தம்மையே நொந்து கொள்வதும் உண்டு. பொன்னம்பலக் கவிராயர் இந்த ரகம். இவரின் ஊர் இராமநாதபுரம். இவர் யாரிடம் என்ன பாட்டுப் பாடினாரோ? என்ன நடந்ததோ தெரிய வில்லை. இருந்தாலும், அவற்றை நினைத்து நொந்துபோய் ஒரு பாட்டுப் பாடியிருக்கிறார்.

ஏட்டைக்கட்டினேன். எழுத்தோடு எழுத்தைவைத்துக்கட்டினேன். அதனுடன் இசையைக்கட்டினேன். கொடுக்கத்தெரியாத பலர்மேல் பாட்டைக்கட்டினேன் கடைசியிலே தொண்டை கட்டியதுதான் மிச்சம் என்கிறார் இவர். அதுமட்டுமில்லை. இந்தப்பாவம் என்றைக்குத்தான் தீருமோ என்று இவருக்குக்கவலை. அதுதான் தெய்வத்தை வேண்டிக்கொள்கிறார்.

'ஏட்டைக்கட்டி எழுத்தோடு எழுத்தைவைத்து
இணைத்துக்கட்டி இசைகட்டி லோபர்மேல்
பாட்டைக்கட்டி என் தொண்டையும்கட்டிய
பாவம்தான் இனி என்றைக்குத் தீருமோ?
தோட்டைக்கட்டும் குழலே நினது அடித்
துணையைக்கட்டிய பேர்க்குப் பரகதி
வீட்டைக் கட்டியதாயே சவுந்தர
மீனவன் பங்கின் மீனாட்சியம்மையே?'

அந்தக்காலத்தில் பாட்டு எழுதுகிறவர்கள் எப்படியெல்லாம் கஷ்டப்பட்டிருக்கிறார்கள் பார்த்தீர்களா? இந்தக்காலத்தில் அப்படிஇல்லை.

ஒருஅம்மா சொன்னார். 'எனதுவீட்டுக்காரர்நிறைய எழுதுவார். பத்திரிகைக்கு அனுப்புவார். நான்தான் அவரை நிறைய எழுதச்சொல்லி உற்சாகப்படுத்துவேன்' என்று நானும் மிகவும் சந்தோசப்பட்டேன். பின்னர்தான் விஷயம் புரிந்தது. அவர்ஏன் அவரை உற்சாகப்படுத்தினார் என்றவிஷயம் அந்தஆள் நிறைய எழுதி எழுதி அனுப்புவாராம். போனவேகத்தோடு- பத்திரிகை அலுவலகத்திலிருந்து கட்டுக்கட்டாகத் திரும்பிவருமாம். இந்த அம்மா அவற்றையெல்லாம் பழைய பேப்பர்க்கடையில் போட்டுவிட்டு அந்த வருமானத்தை வைத்துத்தான் குடும்பம் நடத்துகிறார்களாம். ●

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தமிழீழக் காவல்துறைக்கு முஸ்லிர்களும் விண்ணப்பிக்கலாம்

### மட்டு - அம்பாறை மாவட்ட மேற்பார்வையாளர்

(மட்டக்களப்பு)

தமிழீழ காவல் துறைக்கு விரைவில் புதியவர்களைச் சேர்த்துக்கொள்ளவிருப்பதால் முஸ்லிம்களும் அதற்கு விண்ணப்பிக்கலாம்.

அவர்களின் விண்ணப்பங்களைப் பரிசீலிக்கத் தயாராகவுள்ளோம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் விடுதலைப் புலிகளின் காவல் துறை மட்டு- அம்பாறை மாவட்ட மேற்பார்வையாளர் வி. கங்கைவேணியன்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

எமக்கு நேரடியாகக் கிடைக்கும் முறைப்பாடுகள் என்றில்லாமல், பொதுச் சமாதானத்துக்குக் குந்தகமான விடயங்கள் பற்றிஊடகங்களில் வெளியிடப்படும் செய்திகளை நாம் முறைப்பாடாக எடுத்துக் கொண்டு நடவடிக்கை எடுப்போம்.

சாதி, மத, இன பேதமற்ற சேவையே எமது நோக்கமாகும். நாம் எக்காலத்திலும் பக்கச் சார்பாக நடந்துகொள்ள மாட்டோம்.

குற்றங்களுக்குத் தண்டனை வழங்குவதை விட, குற்றச் செயல்கள் நடைபெறாமல் தடுப்பதிலேயே நாம் கூடிய கவனம் செலுத்துவோம் என்று குறிப்பிட்டார். (உ)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் ஸ்ரீ சித்திவிநாயார் ஆலய கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை, நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலய பிரதம குரு சர்வஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ)

## சத்தியப் பிரமாண மொழிபெயர்ப்பாளர்

(கல்வயல்)

கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் பெரிய மாவடி கச்சாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வே. சிவப்பிரகாசம் அண்மையில் சத்தியப் பிரமாண மொழிபெயர்ப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஓய்வு பெற்ற தபால் அதிரான இவர் தென்மராட்சி ஓய்வூதியர் சங்கப்பொருளாளராகவும் கடமையாற்றுகின்றார். (உ-111)

## கந்தசஷ்டி திருவிழா

(கோப்பாய்)

கோப்பாய் வடக்கு சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் கந்தசஷ்டிப் பெருவிழா நடைபெற்று வருகிறது.

இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை சூரன்போர்த்திருவிழாவும் மறு நாள் திருக்கல்யாண வைபவமும் இடம்பெறவுள்ளது. (உ-79)

## எச்சரிக்கைப் பலகைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைஎல்லைப் பகுதிக்குள் பிரதான வீதி முன்னாலே என எச்சரிக்கும் வீதிப் போக்கு வரத்து சமிக்ஞை பலகைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. (உ-9)

## இலவச மருத்துவ முகாம்

(ஊர்காவற்றுறை)

வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீவக லயன்ஸ் கழகத்தினால் இலவச மருத்துவ முகாம் நடத்தப்படவுள்ளது.

இலவச மருத்துவ சேவை, வைத்திய ஆலோசனை என்பன இதில் இடம்பெறவுள்ளன. (உ- 79)

## சீர்மியம் கருத்தரங்கு

(கோப்பாய்)

கோப்பாய் மத்திப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கான சீர்மியம் சம்பந்தமான பயிற்சிக் கருத்தரங்கு சாந்திக உளவள நிலையத்தால் நடாத்தப்பட்டு வருகின்றது.

வாரம் இருமுறை கோப்பாய் வெள்ளைருவெப் பிள்ளையார் சனசமூக நிலையத்தில் இக் கருத்தரங்கு நடத்தப்பட்டு வருகின்றது. (உ-79)

## வலி. தென்மேற்கில் போசாக்கு செயற்றிட்டம்

(சுதுமலை)

வலி-தென்மேற்கு பிரதேச சபையின் போசாக்கு செயற்றிட்டத்திற்கென இவ்வருடம் ஒதுக்கப்பட்டநிதிமூலம் வறிய போசாக்கற்ற கர்ப்பவதிகள் சிறுவர்களுக்கு போசாக்கு உணவு வழங்கப்படவுள்ளது.

கட்டுடை, நவாலி, சண்டிலிப்பாய், முள்ளி, சுதுமலை, சாவல்கட்டு, பண்டத்ரிப்பு, மாதகல், இளவாலைபோன்ற பிரதேசங்களில்இருந்து இத்திட்டத்திற்கென 20 கர்ப்பவதிகளும் 50 சிறுவர்களும் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இத்திட்டம் அடுத்தவாரம் முதல் அமுல்படுத்தப்படவுள்ளது. (உ-252)

## படைக்கு ஆட்சேர்க்கும் திட்டம் படுதோல்வியாம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா படைக்கு புதிதாக 5 ஆயிரம் பேரை சேர்க்கும் நடவடிக்கைமீண்டும் தோல்வி அடையும் நிலையில் இருப்பதாக படைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

படைக்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கை கடந்தமாதம் 16 ஆம் திகதி ஆரம்பமான போதும் இதுவரையில் 139 பேர் மட்டும் புதிதாக படையில் சேர்ந்துள்ளதாக படைவட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

ஏற்கனவே கடந்த மார்ச் மாதம்5 ஆயிரம் பேரை படையில் சேர்க்கும் நடவடிக்கை தொடர்ந்து 2 மாதங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும் 475 பேரே படையில் சேர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

## மயிலந்தனை படுகொலை விசாரணை முடிவுற்றது

(கொழும்பு)

கொழும்பு மேல் நீதிமன்றில் நீதிபதி சிறீஸ்கந்தராஜா முன்னிலையில் நடைபெற்று வந்த மயிலந்தனை படுகொலைச் சம்பவம் தொடர்பாக வழக்கு விசாரணை முடிவடைந்துள்ளது.

கடந்த 5 ஆம் திகதி நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது எதிரிகள் தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியத்தை தொடர்ந்து தமது தரப்பு வாதங்களும் முடிந்து விட்டதாக எதிரிகள் தரப்பின் சட்டத்தரணி நிவான் திஸநாயக்கா தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து வழக்கு விசாரணைகளை நீதிபதி முடிவிற்கு கொண்டு வந்துள்ளார்.

கடந்த 1997 ஆம் ஆண்டில் நடைபெற்ற மயிலந்தனைப் படுகொலைச் சம்பவம் தொடர்பாக புனானைமுகாமில் உள்ள 16 இராணுவத்தினர் மீது குற்றம் சுமத்தப்பட்டு அவர்களுக்கெதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்கு விசாரணை தொடரப்பட்டிருந்தது.

மேற்படி வழக்கு விசாரணையில் சாட்சிகளின் விசாரணை முடிவடைந்து கடந்த முதலாம் திகதி முதல் எதிரிகளின் விசாரணை நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

## ஐ. தே மு அரசு முஸ்லிம்களின் தோள்களில் சவாரி செய்ய நினைக்கிறது

(அம்பாறை)

இன்றைய அரசு சிறுபான்மை இனமான முஸ்லிம்களின் தோள்களில் சவாரி செய்ய நினைக்கின்றது.

இஸ்லாமிய தஃவா அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

அரசின் இந்தக் கனவு நனவாகக் கூடாது என்பதற்காகவே முஸ்லிம் காங்கிரசின் 9 பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்றைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

நடைபெற்று வருகின்ற சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் சார்பாக ஒரு தனித்தரப்பாக முஸ்லிம்களின் பிரச்சினை முன்வைக்கப்படவில்லை.

இதுவரை அரசதரப்பின் சார்பிலேயே இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தையிலும் முஸ்லிம்காங்கிரசின் தலைவர்ரவூப் ஹக்கிம் கலந்து கொண்டிருக்கின்றார்.

வடக்கு - கிழக்கு வாழ் முஸ்லிம்களின் சமூகப் பாதுகாப்பும் இருப்பும் ஏனைய எந்தவொருவிடயமும்அரசாங்கத்தினால் உறுதிப்படுத்தப்படாததுடன் அங்கீகரிக்கப்படவில்லை இதனை உறுதிப்படுத்துமாறு வேண்டியே பாராளுமன்றை பகிஷ்கரித்து வருகின்ற 9 பாராளுமன்ற உறுப்பினர்களும் கூட்டாகச் சேர்ந்து 5 அம்சக் கோரிக்கையையும் முன் வைத்துள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-15)

# தமிழர் உரிமைக்காகவும், நலன்களுக்காகவும் உழைத்த தலைவர் அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலம்

**அ. விநாயகமூர்த்தி பா. உ.**
தலைவர், அ. இ. தமிழ்க்காங்கிரஸ்



அமரரின்
**101 - வது**
பிறந்ததினம்
இன்றாகும்

இங்கிலாந்தில் சட்டப் படிப்பை பூர்த்தி செய்து பட்டம் பெற்று இலங்கை திரும்பிய ஜீ ஜீ. பொன்னம்பலம் சட்டத்துறையில் மிகவும் பிரபல்யம் பெற்ற சட்டத்தரணியாக விளங்கினார். சட்டத் துறையுடன் நின்றுவிடாது அரசியலிலும் பிரவேசித்து தமிழர்களின் சமுதாய அரசியல் ஏற்றத்துக்காகவும் கடுமையாக உழைத்தவர். 1920 ஆம் ஆண்டு அளவில் இலங்கை உயர் நீதிமன்ற அப்புக்காத்தாக தன்னைப்பதிவு செய்து கொண்ட அவர் அப்போதே அரசியலிலும் ஈடுபட்டார்.

**டொனமூர்கமிஷன் சிபார்சு**

அக்காலத்தில் டொனமூர் கமிஷன் சிபாரிசுகள் இந்நாட்டில் வெளியிடப்பட்டிருந்தன. இச்சிபாரிசுகளை அப்போதைய பெரும் தலைவர் சேர். பொன். இராமநாதன் ஆட்சேபிப்பதற்காக லண்டன் பயணமானார். அந்த நேரத்தில் இங்குள்ள சில தமிழ் அரசியல் பிரமுகர்கள் அச்சிபார்சினை ஏற்க முடிவு செய்தார்கள். 1929 ஆம் ஆண்டு கொழும்பில் சில தமிழ் பிரமுகர்கள் இச்சிபாரிசுகளை ஏற்கும் பொருட்டுத்தீர்மானம் எடுப்பதற்காக கொழும்பில் கூட்டம் கூட்டினார்கள். அக்கூட்டத்திற்கு வந்திருந்த இளைஞரான ஜீ ஜீ. பொன்னம்பலம் அக்கமிஷனின் சிபாரிசுகளால் ஏற்பட இருக்கும் தீமைகளைச் சுட்டிக்காட்டி, சிபாரிசுகளை ஏற்கக்கூடாதென்ற தீர்மானத்தை முன்மொழிந்தார். தீர்மானம் அதிகப்படியான வாக்குகளால் நிறைவேறிற்று. அன்று தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜீ. ஜீ. பொன்னம்பலம், சேர். பொன்னம்பலம் இராமநாதன் மறைவிற்குப் பின்பு தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தார். இந்நாடு சிங்கள நாடு என்றும் இந்நாடு சிங்களவருக்கே சொந்தம் என்றும் சிங்களத்தலைவர்களினிடையே ஒரு எண்ணம் வலுப்பெற்ற நிலையில், சிங்கள மகாசபையை பண்டாரநாயக்கா தோற்றுவித்தார். சிறுபான்மையினரை ஒதுக்கும் திட்டமிட்ட சூழ்ச்சியை உணர்ந்த ஜீ ஜீ பொன்னம்பலம் தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா எனும் தாரக மந்திரத்திற்கமைய தமிழரைப் பாதுகாக்கும் முறையிலும் தமிழரின் குரலாக இருக்கும் பொருட்டும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரசை 29.8.1944 ல் நிறுவினார்.

**சோல் பரிக் கமிஷன் சிபார்சு**

1945- இல் தமிழ் காங்கிரஸ் சார்பில் ஜீ. ஜீ. பொன்னம்பலம் சோலபரிக் கமிஷன் முன்தோன்றி சிறுபான்மை மக்களின் நிலையை விளக்கியதோடு சமபிரநிதித்துவ கோட்பாட்டை முன்வைத்தார்.

சோல்பரிக்குழுவினர் சமபிரநிதித்துவக் கோட்பாட்டை ஏற்காவிடினும் ஜீ. ஜீ. யின் வாதத்தின் காரணத்தால் 29 ஆம் பிரிவு போன்ற சில பாதுகாப்புக்களை சிறுபான்மையினரின் நன்மை கருதி அரசியல் சாசனத்தில் உட்புகுத்தவேண்டுமென சிபாரிசு செய்தனர். ஒவ்வொரு தமிழனும் சம உரிமையுடன் பயமில்லாமல் இலங்கையின் எந்தப்பாகத்திலும் இருக்கவேண்டும். சம உரிமையோடு வாழ முடியாவிடில் தமிழ் மக்கள் பிரிந்துதான் வாழ வேண்டும் என்பது அவர் கருத்தாக இருந்தது. தனிச் சிங்கள மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது, அம்மசோதா அமுல்படுத்தப்பட்டால் நாடு பிளவுபடும் என ஆணித்தரமாக அவர் பாராளுமன்றத்தில் எடுத்துரைத்தார்.

இலங்கை வாழ் இந்தியரின் பிரஜாவுரிமையைப்பறித்தசட்டம் 1948 ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த 18 ஆம் இலக்க இலங்கையர் பிரஜாவுரிமைச் சட்டமாகும். அதைத் தலைவர் பொன்னம்பலம்வலுவாக எதிர்த்தார்.

**இந்தியப் பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச்சட்டம்**

அதன் பிறகு தமிழ்க்காங்கிரஸ், அரசாங்கத்துடன் ஒத்துழைக்க ஆரம்பிப்பதற்குமுன்னர் 1948ஆம் ஆண்டு 18ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கை பிரஜாவுரிமைச் சட்டத்தின்படி பிரஜாவுரிமை இழந்த இந்தியவம்சாவளியினருக்கு அவ்வுரிமையை மறுபடியும் திரும்ப வாங்க பண்டிட் நேருவுடன் கலந்தாலோசித்து ஒரு மசோதாவைக் கொண்டு வர வேண்டுமென்று டி.எஸ். சேனநாயக்காவிடம் ஒருவாக்குறுதியைப் பெற்றது. இப்பேச்சுவார்த்தைகளில் பொன்னம்பலமும் செல்வநாயகமும் டாக்டர் நாகநாதனும் பங்குபற்றினர். இவ்வாக்குறுதியின் பயனாகவே பிரஜாவுரிமை இழந்த இந்தியர்களுக்கு பிரஜாவுரிமை அளிக்கும் பொருட்டு இந்தியப் பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டத்தைடி.எஸ் சேனநாயக்கா பாராளுமன்றத்தில் கொண்டு வந்தார். இழந்த பிரஜாவுரிமையைத் திரும்பவும் பெற வழிவகுக்கும் ஒரு மசோதாவையே ஜீ.ஜீ. பொன்னம்பலம்ஆதரித்தார். இச்சட்டத்தின் பிரகாரம் ஏழு வருடம் இலங்கையில் வசித்த கல்யாணம் முடித்த இந்தியருக்கும் 10வருடம் வசித்த கல்யாணம் ஆகாத இந்தியர்களுக்கும் பிரஜாவுரிமை பெற முடியும்.

குடியுரிமை பெற விரும்புவோர் மசோதா நிறைவேறி இரண்டு வருடங்களுக்குள் விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டுமென்பது இந்தியப் பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டத்தின் ஐந்தாவது பிரிவிற் காணப்படும் நிபந்தனையாகும். செல்வநாயகத்தின் அறிவுறுத்தலின் பேரில் இந்திய தேசியக் காங்கிரஸ் தலைவர்கள் தொண்டமானும் அஸீஸும் சத்தியாக்கிரகத்தை நடத்தினார்கள். இந்தச் சத்தியாக்கிரகம்18மாதங்களுக்கு தொடர்ந்து நடந்தது பின்பு சத்தியாக்கிரகம் கைவிடப்பட்டு தொண்டமானே முதல்மனு வைச் செய்தார். மிகுதி ஆறு மாதங்களில் அவசரம் அவசரமாக அனுப்பியமனுப்பத்திரங்களில் பிழையானதும் பூர்த்தியற்றதுமான தகவல்கள் கொடுக்கப்பட்ட காரணத்தால் 90 வீதமான மனுக்கள், நிராகரிக்கப்பெற்றன.

**மலையக மக்கள் நலன்**

1933 ஆம்ஆண்டிலேபொன்னம்பலம் சட்டசபை அங்கத்தவரான காலம்தொட்டு இலங்கை-இந்திய காங்கிரஸ் மலைநாட்டுத் தமிழரை அரசியல் கட்சியாக உருப்பெற்ற 1945 ஆம் ஆண்டு வரை சட்டசபையிலும் அதற்கு வெளியிலும் மலைநாட்டுத் தமிழர்களின் உரிமைக்காகவும் அவர்களின் பொருளாதார முன்னேற்ற நலன்களுக்காகவும் வாதாடியும் வந்தார் என்பது வரலாறு.

அரசியல் அமைப்புச் சீர்திருத்தத்திற்கான சோல்பரி ஆணைக்குழுவினால் தமிழ் காங்கிரசின் சாட்சியத்தை கேட்பதற்காக, ஒதுக்கிய மூன்று நாட்களில் ஒரு நாள் முழுவதும் மலைநாட்டுத் தமிழர்களுக்காக வாதாடினார். அதன் பயனாக மலைநாட்டுத் தமிழர்களுக்கு பதினான்கு வீதப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டுமென்று சோல்பரிக்குழுவினர் தமது அறிக்கையில் சிபாரிசு செய்தனர்.

இலங்கை - இந்தியக்காங்கிரசும் அகில இலங்கை தமிழ்க்காங்கிரசும் ஒரு ஐக்கிய முன்னணி அமைத்து ஒரு கொடியின்கீழ் நின்று 1947 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் கலந்து கொள்ள வேண்டுமென்று பொன்னம்பலம் யோசனை தெரிவித்தார். அந்த யோசனையை ஏற்றிருந்தால் இன்று தமிழினத்தின் நிலைமை வேறு விதமாக அமைந்திருக்கும்.

1948 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது சுதந்திர தின விழாவில் நந்திக்கொடியையும் ஏற்றுவித்த பெருமை அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களைச் சாரும்.

பாராளுமன்றத்தில் முதன் முறையாக தமிழில் உரையாற்றியவர் என்ற பெருமையும் அவருடையதே.

## 1008 சங்காபிஷேகம்

(நெல்லியடி)

நெல்லியடிதடங்கன்புளியடி முருகமூர்த்தி ஆலயகந்தசஷ்டி 5 ஆம் நாள் உற்சவமும் ஆயிரத்தெட்டு சங்காபிஷேகமும் நாளை சனி கிழமை இடம் பெறவுள்ளது

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை சூரசங்காரமும் இடம்பெறவுள்ளன. (உ-10)

## வவுனியாவில் பெருமளவு நெற்செய்கை

(வவுனியா)

இம்முறைவவுனியா மாவட்டத்தில் பெரும்போக விவசாயம் பெருமளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

12 ஆயிரம் ஹெக்டேயரில் இம் முறை நெல் விதைக்கப்பட்டுள்ளதாகவும் சுமார் 54 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை அறுவடை செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றன. (உ-10)

## விசாரணை அறிக்கை இன்று சமர்ப்பிப்பு

(அம்பாறை)

காஞ்சிரங்குடாத் தாக்குதல் சம்பவம் தொடர்பாகவிசாரணையினை நடத்திய குழு விசாரணை அறிக்கையினை இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடமும் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்காவிடமும் சமர்பிக்கவுள்ளது.

முன்னாள விமானப்படைத் தளபதி ஹரிகுணதிலகவின் தலைமையில அமைத்துள்ள இக் குழு இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக இராணுவத்தினரிடமும் விடுதலைப் புலிகளிடமும் பொதுமக்களிடமும் விசாரணைகளை மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில், நோபல் பரிசு பெற்ற ரஷிய எழுத்தாளரான BorisPasternak எழுதிய Doct-orZhivago நாவலைத் தழுவி DavidLean இயக்கத்தில் உருவான திரைப்படம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைமு.ப10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும்கலந்து கொண்டு பயன்பெறலாம்என புறநிலைப்படிப்புகள அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

(உ)

## தீவக வலய பாடசாலை அணிகளிடையே உதை பந்தாட்ட போட்டி

(ஊர்காவற்றுறை)

தீவக கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் உடற் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.என். லோகநாதன் தலைமையில் இடம்பெற்றன.

14 வயதுப் பிரிவு அணியில் முதலாமிடத்தை புங்குடு தீவு மகாவித்தியாலயமும் இரண்டாமிடத்தைபுங்குடுதீவு சித்தி விநாயகர் வித்தியாலயமும் மூன்றாம்இடத்தைஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியும் பெற்றது.

16வயதுப் பிரிவில் முதலாமிடத்தினை வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயமும் இரண்டாமிடத்தினை காரைநகர் கலாநிதிஆ தியாகராஜா ம. வித்தியாலயமும்மூன்றாம் இடத்தினை நயினாதீவு சிறிகணேசா வித்தியாலயமும் பெற்றது.

18 வயதுப்பிரிவில் முதலாமிடத்தினை புனிதஅந்தோனியார் கல்லூரியும் இரண்டாமிடத்தினை வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைச்சாமி ம.ம வித்தியாலயமும்மூன்றாமிடத்தினை காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா. ம.ம. வித்தியாலயமும் பெற்றது.

மேற்படி போட்டிகளில் முதல் இரண்டு இடங்களையும் பெற்ற 16,18 வயதுப் பிரிவு அணிகள்யாழ் மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-75)

## திலக் மாரப்பன மீதான நம்பிக்கையில்லா பிரேரணை விவாத நாள் குறித்து ஆராய்வு

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டம் மீதான விவாதம்நடைபெறும் போதே, பாதுகப்பு அமைச்சர் திலக் மாரப்பன மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை பற்றி விவாதிக்க முடியுமா என்பது குறித்து சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா ஆராய்ந்து வருகிறார்

எதிர்க் கட்சி உறுப்பினர்களைச் சந்தித்து பேசிய போதே சபாநாயகர் இதுவிடயம் குறித்து பிரஸ் தாபித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜனக்க பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

மாரப்பனவுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட இந்த பிரேரணையை கூடிய விரைவில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபாநாயகரிடம் வலியுறுத்திய போதிலும்,

வரவு செலவுத்திட்ட விவாதத்திற்காக நாட்கள் ஒதுக்கப்பட்ட பின்னர் அதை வேறு விடயங்களுக்காக பயன்படுத்துவதுசம்பிரதாயத்துக்கு முரணானது என்று ஆளும் கட்சியினர் தெரிவித்தனர்.

எனினும் பாதுகாப்பு அமைச்சர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் குறித்து, சபாநாயகர்தனது முடிவை கட்சி தலைவர்களின் அடுத்த கூட்டத்தில் தெரிவிப்பார்என அரசியல் வட்டாரங்கள் கருத்து தெரிவித்துள்ளன. (உ-8)

## நோயாளர் படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

தீவுப் பகுதி நோயாளர்கள் யாழ். வைத்தியசாலைக்கு சென்று வர வசதியாக யு. என். எச். சி. ஆர். நிறுவனம் 3 மில்லியன் பெறுமதியான படகொன்றை சேவையில் அமர்த்தவுள்ளது. (உ-6,16)

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு
# இரண்டாயிரத்து ஐந்நூறுபேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்பு நிதிக்கடன் திட்டத்தின் கீழ் கடன் கொடுத்தவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப் பட்ட 2ஆயிரத்து 500பேரின் கடன், இம்மாதம் 21ஆம் திகதியில் இருந்து 24ஆம் திகதி வரை தமிழீழ நிதித் துறையினால் மீளளிக்கப்படவுள்ளதாக நிதிபொறுப்பாளர் யோ. தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார் மீளளிப்பு நடை முறைகள் வருமாறு,

1. அ) மீளளிப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிற் கடன்சான்றிதழை வைத்திருப்பவர்களுக்கான மீளளிப்பு முதற்கட்டமாக நடைபெறும். நேரமும் மீளளிக்கப்படும் இடமும் பின்னர் அறிவிக் கப்படும்.
   ஆ) கடன் சான்றிதழைத் தவறவிட்டவர்களுக்கான மீளளிப்பு இரண்டாம் கட்டமாக நடைபெறும்.

இது தொடர்பான நடைமுறைகள் பின்னர் அறிவிக்கப்படும். இதனை கருத்திற்கொண்டு எம்முடன் ஒத்துழைக்குமாறு கடன் சான்றிதழைத் தவறவிட்ட வர்களை வேண்டுகின்றோம்.

2. கடன் சான்றிதழாளர் நேரடியாக வருகைதந்து கடனை மீளப் பெற வேண்டும்.
3. ஒருவர் சார்பில் மற்றொருவர் கடனைச் செலுத்தியி ருப்பின் இருவரும வருகைதர வேண்டும்.
4. கடன்சான்றிதழாளர் இறந்திருப்பின் பின்வரும் ஆவணங்களைப் பின்னுரித்தாளர் கொண்டு வர வேண்டும்.
   அ) இறப்புச்சான்றிதழ்
   ஆ) இறப்புச்சான்றிதழின் படி (பிரதி)
   இ) கடன் சான்றிதழ்
   ஈ) பின்னுரித்தாளரின் அடையாள ஆவணம்
   உ) பின்னுரித்தாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவையாளரின் கடிதம்.
5. கடன் சான்றிதழிலுள்ள முழுப்பெயரும் அடையாள ஆவணத்திலுள்ள முழுப்பெயரும் வேறுபடுமிடத்து இரண்டு பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றதென் பதை உறுதிப்படுத்தி கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்.
6. அ) மீளளிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் சான்றிதழாளா தமது அடையாள ஆவணத்தைக் காண்பித்தே கடனை மீளப்பெற முடியும்.
   ஆ) அடையாள ஆணவணம் அற்றவர் தமது புகைப்படத்தை (2.5 அங். x 2.0 அங். அளவு) அதன் பின்புறத்தில் தமது பெயர், முகவரி, கையொப்பம் ஆகியவற்றை உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்திக் கையளிப்பின் அது ஏற்றுக்கொள்ளப்படும்.
   இ) இவ்வாறு செய்ய முடியாதவர்களுக்கான மீளளிப்புக்கடன் சான்றிதழைத் தவற விட்டவர் களுக்கான இரண்டாம் கட்ட மீளளிப்பின் போது மேற்கொள்ளப்படும்.

இது பற்றிய நடைமுறை பின்னர் அறிவிக்கப்படும்.

பிரதேசரீதியாக மீளளிப்புக்குத் தெரிந்தெடுக்கப்பட் டவர்களின் பெயர்கள் வருமாறு.

## யாழ்ப்பாணம் உதவிஅரச அதிபர் பிரிவு

யா/யா/5 திருமதி. கெலன்றீசா டெலாஸ்
யா/யா/10 இரத்தினம் அருளானந்தம்
யா/யா/14 திருமதி. புனிதவதி ஆனந்தராசா
யா/யா/16 திருமதி. லூர்த்தம்மா அந்தோணிப்பிள்ளை
யா/யா/21 திருமதி. புவனராணி கேதீஸ்வரன்
யா/யா/23 திருமதி. புளோரன்ஸ் பிலோமினா பிறேம்குமார்
யா/யா/26 கொன்ஸ்ரன்ரைன் அம்பலவாணர் விஜயரட்ணம்
யா/யா/31 வயித்தியாம்பிள்ளை பெனடிக்ற்
யா/யா/41 எடிஏபிள் வர்ணகுலசிங்கி
யா/யா/42 திருமதி. அக்கினேஸ் இராயப்பு
யா/யா/43 சுப்பையா பொன்னையா
யா/யா/54 திருமதி. செல்லம்மா வைரவசுந்தரம்
யா/யா/58 திருமதி. பிரான்ஸ்சிஸ்கா அலோசியஸ்
யா/யா/59 திருமதி. எலிசபெத் பஸ்தியாம்பிள்ளை
யா/யா/69 இராசநாயகம் இராசதுரை
யா/யா/72 திருமதி ஞானக்கண்ணு மகாதேவா
யா/யா/83 திருமதி மேரிமாகிறெற்நீக்கிலாப்பிள்ளை
யா/யா/87 திருமதி. திரேசா கனிப்பிள்ளை அன்ரனி
யா/யா/92 நாகநாதி திருநாவுக்கரசு
யா/யா/93 நீக்கலஸ் ஜோசப் மேர்வின் விக்னராஜா
யா/யா/97 செல்வநாயகம் சகாதேவன்
யா/யா/98 திருமதி. அரியட் சிவசுப்பிரமணியம்
யா/யா/106 தம்பி பஞ்சலிங்கம்
யா/யா/111 கந்தையா இரத்தினசிங்கம்
யா/யா/112 திருமதி. கிருஷ்ணகுமாரி அலோசியஸ்
யா/யா/123 சின்னத்தம்பி நடராசா
யா/யா/129 மயில்வாகனம் ஸ்ரீகாந்தா
யா/யா/130 கணபதிப்பிள்ளை சிவசம்பு
யா/யா/131 இ.தம்பிப்பிள்ளை வைத்தியநாதன்
யா/யா/135 திருமதி. ராஜேஸ்வரி பிலேந்திரன்
யா/யா/141 சுப்பிரமணியம் ஜெகநாதன்
யா/யா/143 திருமதி.விஜயசுந்தரவல்லி சிவசுப்பிரமணியம்
யா/யா/148 விசேந்திப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை
யா/யா/154 கந்தசாமி குமரகுருபரன்
யா/யா/159 வஸ்தியாம்பிள்ளை பிலிப்இராசநாயகம்
யா/யா/177 திருமதி. ஜொய்சி வசந்தராஜா
யா/யா/178 திருமதி. மாகிரெட் டொமினிக்
யா/யா/184 சின்னையா அந்தோனிப்பிள்ளை
யா/யா/186 திருமதி. தெய்வநாயகி மகாலிங்கம்
யா/யா/193 ரூஷாந்தி நோபேட்
யா/யா/199 இரத்தினம் தவராசா
யா/யா/205 திரு. பேதுருப்பிள்ளை மரியதாசன் தோமஸ்
யா/யா/210 திருமதி. மகேஸ்வரி சிவசெல்வநாதன்
யா/யா/258 திருமதி. தனலட்சுமி சுப்பிரமணியம்
யா/யா/281 திருமதி. கனகாம்பிகை சதாசிவம்
யா/யா/322 திருமதி. நந்தினி யோகலிங்கம்
யா/யா/326 திருமதி. அமிர்தநாயகி விக்னேஸ்வரராஜா
யா/யா/397 திருமதி. யசிந்தா றஞ்சினி ஜோஜ்கமில்டன்
யா/யா/399 அருட்பிரகாசம் இம்மானுவல்
யா/யா/426 ஆசிர்வாதம் எட்வேட்
யா/யா/434 சின்னையா கனகலிங்கம்
யா/யா/440 திருமதி. மேரிபுஸ்பம் சூசைநாதர்
யா/யா/443 கந்தையா கருணாநிதி
யா/யா/447 திருமதி. ஜெயராணி சடாச்சரசண்முகதாஸ்
யா/யா/471 திருமதி. மேரியோசபின் தர்மாவதி அலெக்சாந்தர்
யா/யா/473 திருமதி. தங்கரத்தினம் தம்பிராசா
யா/யா/492 திருமதி ஜெயகௌரி இராஜேஸ்வரன்
யா/யா/504 திருமதி தில்லைநாயகி அமிர்தலிங்கம்
யா/யா/508 திருமதி. மகேஸ்வரி தனபாலசிங்கம்
யா/யா/509 அருணாசலம் பரசிவம்
யா/யா/511 திருமதி. லின்டா தேவேந்திரன்
யா/யா/542 மாரிமுத்து மகேஸ்வரன்
யா/யா/548 இராசேஸ்வரி மாரிமுத்து
யா/யா/582 சத்தியப்பிள்ளை அல்பிரட்
யா/யா/593 அரசரத்தினம் மார்க்கண்டு
யா/யா/629 மாரிமுத்து செல்லப்பா
யா/யா/630 திருமதி. தையல்நாயகி சண்முகம்
யா/யா/639 கந்தையா தர்மலிங்கம்
யா/யா/661 திருமதி. தனலட்சுமி தியாகலிங்கம்
யா/யா/702 முத்துத்தம்பி சிவராசா
யா/யா/731 திருமதி வன்மலாதேவி சுப்பிரமணியன்
யா/யா/743 திருமதி குமுதினி யோகச்சந்திரன்
யா/யா/782 திருமதி. பூமணி நாகலிங்கம்
யா/யா/785 சுப்பிரமணியம் நகுலேஸ்சரன்
யா/யா/843 கந்தர் பொன்னுத்துரை
யா/யா/853 ஏகாம்பரம் துரைச்சாமி
யா/யா/879 திருமதி. மிருணாளினி ஜெயராசா
யா/யா/930 திருமதி ஜெயந்தினி பிரேமநாதன்
யா/யா/945 செபஸ்தியாம்பிள்ளை மரியதாசன்
யா/யா/946 செபஸ்தியாம்பிள்ளை மரியதாசன்
யா/யா/947 செஸ்தியாம்பிள்ளை மரியதாசன்
யா/யா/962 திருமதி. யூலியற் டேவிற்
யா/யா/994 அமலா அருளானந்தம்
யா/யா/1071 திருமதி சிசிலியா சோபியா ஜெயமணி நேசராஜா
யா/யா/1085 திருமதி பாமா சிவபாலன்
யா/யா/1142 திருமதி திரேசா வரப்பிரகாசம்
யா/யா/1150 கணேசப்பிள்ளை ஜெயவீரசிங்கி
யா/யா/1204 லோப்பையா எட்வின் பங்கிறோஷஸ்
யா/யா/1290 திருமதி நேசமணி பாலசிங்கம்
யா/யா/1295 வேலர் ஐயாத்துரை
யா/யா/1311 திருமதி தையல் நாயகி கந்தலிங்கம்
யா/யா/1406 ஜோசெப் வஸ்தியாம்பிள்ளை
யா/யா/1492 இரத்தினம் இரத்தினகோபால்
யா/யா/1537 துரையப்பா இரத்தினம்
யா/யா/1622 திருமதி சியாமளா திஜாகராஜா
யா/யா/1694 திருமதி ரஞ்சினி சிவசுப்பிரமணியம்
யா/யா/1724 திருமதி நீலாம்பி பரமசிவம்
யா/யா/1732 சதாசிவம் பிள்ளை குகதாஸ்
யா/யா/1735 வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி
யா/யா/1748 குமாரசாமி கதிரவேல்
யா/யா/1767 திருமதி நீலா வின்சன்ட் செல்லையா
யா/யா/1790 திருமதி லெட்சுமி கோவிந்தபிள்ளை
யா/யா/1828 திருமதி யசோதாதேவி தங்கராஜா
யா/யா/1921 வேல்முருகு யோகநாதன்
யா/யா/1954 திருமதி நவறஞ்சினி சுந்தரலிங்கம்
யா/யா/2034 பரமசாமி இராசலிங்கம்
யா/யா/2039 தம்பிஐயா தியாகராசா
யா/யா/2116 கந்தையா சோமஸ்கந்தன்
யா/யா/2141 திருமதி மேரி அமலா இராஜேஸ் பரம்
யா/யா/2156 திருமதி ஸ்ரெலா ஜோண்பிள்ளை
யா/யா/2174 திருமதி ஜெயராணி ஞானப்பிரகாசம்
யா/யா/2178 ஐயாத்துரை அருளானந்தம்
யா/யா/2181 பாலசிங்கம் பாலச்சந்திரன்
யா/யா/2218 திருமதி மரிஸ்ட்ரெலா ஜெவதிஜெயரட்ணம்
யா/யா/2231 சலமோன் அலெக்ஸ்சாண்டர்
யா/யா/2261 கிறிஸ்தோப்பர் அல்பிரட் ஞானசீலன்
யா/யா/2304 மிக்கேல் பாக்கியநாதர்
யா/யா/2396 மனுவேல்பிள்ளை வில்பிறேட்
யா/யா/2321 செபமாலை ஜேசுதாசன்
யா/யா/2333 பாலச்சந்திரா ஞானசபாபதி
யா/யா/2377 சந்தியோ கபிரியேல் செபஸ்தியாம்பிள்ளை
யா/யா/2402 பொன்னுத்துரை சர்வானந்தன்
யா/யா/2418 திருமதி அன்னம்மா சின்னத்துரை
யா/யா/2495 திருமதி கலிஸ்ரா பொன்சின்
யா/யா/2510 சீமான்பிள்ளை சில்வெஸ்ரர்
யா/யா/2512 தம்பிராஜா நரேஸ் நியூட்டன்
யா/யா/2548 திருமதி வாலாம்பிகை சோதிநாதன்
யா/யா/2590 திருமதி சுகந்தி பாலசுப்பிரமணியம்
யா/யா/2639 சின்னத்துரை இராசையா
யா/யா/2642 திருமதி இராஜேஸ்வரி செந்தில்நாதன்
யா/யா/2652 பொன்னம்பலம் சிவலோகநாதன்
யா/யா/2679 காசிநாதர் குட்டித்தம்பி இராசரெட்ணம்
யா/யா/2708 திருமதி யோகராணி சீவரத்தினம்
யா/யா/2776 யோகசுந்தரம் சிவகுமார்
யா/யா/2968 திருமதி இராஜேஸ்வஹீரி குணரெட்ணம்
யா/யா/3009 செபஸ்தியாம்பிள்ளை பிறெட்றிக்
யா/யா/3015 செபஸ்தியாம்பிள்ளை பிறெட்றிக்
யா/யா/3121 திருமதி பிரான்சிஸ்கா அலோசியஸ்
யா/யா/3122 அந்தோனிமுத்து யோசவ்
யா/யா/3842 திருமதி ரோஸ்மலர் அமலநேசன்
யா/யா/3161 திருமதி ஜசிந்தா பாலசுப்பிரமணியம்
யா/யா/3283 டெனிஸ்பத்திநாதர்
யா/யா/3298 மோசேஸ் எட்வேட்ஸ்
யா/யா/3304 ஆசையார் கணபதிநாதன்
யா/யா/3463 குருசுமுத்து தங்கராசா
யா/யா/3531 திருமதி.றோஸ்மலர் பிரான்சிஸ்
யா/யா/3540 சிரில்மைக்கேல்
யா/யா/3562 அல்பிறட் வரதன்
யா/யா/3639 திருமதி பரிமளரத்தினம் திருநாவுக்கரசு
யா/யா/3716 திருமதி இராசம்மா கனகசபை
யா/யா/3736 கணபதிப்பிள்ளை நல்லையா யோகசிங்கம் மொறிஸ்
யா/யா/3807 திருமதி புஸ்பராணி மன்னவராயன்
யா/யா/3860 திருமதி ஜெகதீஸ்வரி சபாலிங்கம்
யா/யா/3890 திருமதி சிவபாக்கியம் நடராஜா
யா/யா/3916 திருமதி செல்வமலர் மாணிக்கராஜா
யா/யா/3974 திருமதி செல்வமனோகரி சுப்பிரமணியம்
யா/யா/4131 அந்தோனிப்பிள்ளை கிறிஸ்தோபர்
யா/யா/4173 திருமதி ஜெயமலர் பாக்கியநாதர்
யா/யா/4177 சவரிமுத்து கனகராஜன்
யா/யா/4221 திருமதி மெ.ரா.குவின்ரா அரியராஜா
யா/யா/4227 சங்கரன் ஹரிகரன்
யா/யா/4231 திருமதி கமலவேணி சோமசேகரம்
யா/யா/4289 விஜயரட்ணம்பிலமென்ஸ்ரனிஸ்லாஸ ஜீவரட்ணம்
யா/யா/4292 எஸ்தர் செல்லத்துரை
யா/யா/4306 திருமதி நிமலாம்பிகை குக்
யா/யா/4318 சின்னையா நடராஜா
யா/யா/4326 திருமதி ஜெமிலா தாசியஸ்
யா/யா/4337 திருமதி மொனிக்காமாகிறட்செபரட்ணம்
யா/யா/4352 திருமதி செலஸ்ரினா அருளப்பு
யா/யா/4439 சவிரியான் அன்ரன்
யா/யா/4485 திருமதி சுசிலாதேவி கனகரட்ணம்
யா/யா/4501 திருமதி அன்ரனிற்தவசீலி நவரட்ணம்
யா/யா/4541 திருமதி இந்திராதேவி யோகநாதன்
யா/யா/4657 திருமதி மகேஸ்வரி சோமசேகரம்
யா/யா/4744 கதிரித்தம்பி அம்பலவாணர்
யா/யா/4803 கதிரேசு நடராசா
யா/யா/4827 யேக்கப்மரியதாஸ்சிவப்பிரகாசம்
யா/யா/4839 திருமதி பபியோலா செல்வராணிலாசறஸ் குணநாயகம்
யா/யா/4866 திருமதி மேரி சோபியா விஸ்வலிங்கம்
யா/யா/4917 திருமதி ஜெயமணி மரியநாயகம்
யா/யா/4979 திருமதி றோசலின் சூசைப்பிள்ளை
யா/யா/5017 திருமதி மேரிறோஸ் டிஸ்மஸ்
யா/யா/5033 செல்வி ஜோகேஸ்வரி தணிகாசலம்
யா/யா/5036 மாணிக்கம் மரியதாஸ்

## உடுவில் உதவி அரச அதிபர் பிரிவு

யா/உ/16 பாவிலு அமிர்தநாதன்
யா/உ/31 சின்னத்தம்பி குகதாஸ்
யா/உ/34 திருமதி சந்தானலட்சுமி சிவராசா
யா/உ/74 செல்லப்பா மயில்வாகனம்
யா/உ/76 கந்தர் நல்லையா
யா/உ/77 திருமதி நாகேஸ்வரி சேனாதிராசா
யா/உ/83 கந்தர் பாலசிங்கம்
யா/உ/92 திருமதி சத்தியவதி இராசேந்திரம்
யா/உ/102 இராமலிங்கம் சச்சிதானந்தம்
யா/உ/119 ரட்ணம் தீபம்
யா/உ/155 தம்பிப்பிள்ளை சோமசுந்தரம்
யா/உ/172 தில்லைநாதன் மாணிக்கவாசகர்
யா/உ/242 திருமதி விஜயலட்சுமி இராசநாயகம்
யா/உ/246 குழந்தைவேலு சபாபதிப்பிள்ளை
யா/உ/315 மார்க்கண்டு மகாதேவன்
யா/உ/331 திருமதி ஸ்ரீவசந்தா கெங்கேஸ்வரன்
யா/உ/346 இராசா சதானந்தன்
யா/உ/371 அலோசியஸ் மனோகரன்
யா/உ/459 திருமதி சகுந்தலாதேவி சிறீஸ்கந்தராஜா
யா/உ/479 இராமசாமி குகதாசன்
யா/உ/509 திருமதி டிவீனியாரஞ்சிதமணி அரியராசா
யா/உ/517 திருமதி நீலாம்பாள் மார்க்கண்டு
யா/உ/625 குமரேசு கனகநாயகம்
யா/உ/650 திருமதி கருணைத்தவசோதி குமாரசுவாமி
யா/உ/661 திருமதி கலாவதி சகாதேவன்
யா/உ/680 சின்னையா மாசிலாமணி
யா/உ/713 திருமதி பாக்கியவதி இரகுநாதன்
யா/உ/731 சண்முகம் இராஜேந்திரம்
யா/உ/775 நடராசா செல்வராசா
யா/உ/819 ஆறுமுகம் விபுலானந்தராசா
யா/உ/882 கமலாம்பிகை சின்னத்தம்பி
யா/உ/921 திருமதி றோகினி ரூபமூர்த்தி
யா/உ/981 வைத்திலிங்கம் தவராசா
யா/உ/1209 இராமநாதன் யோசேப் நவரத்தினம்
யா/உ/1312 மார்க்கண்டு கலாநிதி
யா/உ/1325 திருமதி பத்மாசனி சர்வானந்தன்
யா/உ/1354 சிவப்பிரகாசம் தில்லைநடேசன்
யா/உ/1670 கார்த்திகேசு சுப்பையா
யா/உ/1671 இராசதுரை செல்வராசா
யா/உ/1690 திருமதி விஜயலட்சுமி சிவலிங்கம்
யா/உ/1825 செல்லப்பா தெய்வேந்திரம்
யா/உ/1879 திருமதி கமலேஸ்வரி கணேந்திரன்
யா/உ/1967 திருமதி இரத்தினபூபதி குணரட்ணம்
யா/உ/2089 திருமதி யோகம்மா வேலாயுதபிள்ளை
யா/உ/2104 அப்பாக்குட்டி பாலசுப்பிரமணியம்
யா/உ/2123 செல்லையா குணரத்தினம்
யா/உ/2122 வேலுப்பிள்ளை கனகசபை
யா/உ/2137 திருமதி மலர் கந்தையா
யா/உ/2196 திருமதி சிவபாக்கியம் தம்பிப்பிள்ளை
யா/உ/2277 சண்முகம் சிவசுப்பிரமணியம்
யா/உ/2347 திருமதி தெய்வநாயகி கார்த்திகேசு
யா/உ/2525 திருமதி செல்வராணி கதாதரன்
யா/உ/2633 சின்னையா சின்னத்துரை
யா/உ/2647 திருமதி திருப்பதி இரத்தினம்
யா/உ/2652 தம்பையா சோமசுந்தரம்
யா/உ/2676 சின்னத்தம்பி இராசேந்திரம்
யா/உ/2765 திருமதி சிவாஜினி முருகசோதி
யா/உ/2806 திருமதி சாந்தகுமாரி கருணசேன
யா/உ/2830 திருமதி சந்திராதேவி சீனிவாசகம்
யா/உ/2838 திருமதி லக்ஸ்மினி தேவிபாலச்சந்திரன்
யா/உ/2840 சதாசிவம்பிள்ளை குலசேகரம்பிள்ளை
யா/உ/2983 இரத்தினம் பரராஜசிங்கம்
யா/உ/3026 திருமதி சாந்தினிதேவி பரமேஸ்வரன்
யா/உ/3039 திருமதி மடோனா சாள்ஸ்
யா/உ/3053 சுப்பையா பொன்ராசா

**மீளளிப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஏனைய பிரதேசத் தவர்களின் பெயர்கள் தொடர்ந்து வெளிவரும்.**

## ஐ. தே. மு. அரசின் வரவுசெலவுத் திட்டம்

# பொதுமக்களின் எண்ணங்களில் மண்ணை அள்ளிப் போட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

ஐக்கியதேசிய முன்னணி அரசின் இரண்டாவது வரவு செலவுத்திட்டம் நேற்று முன் தினம் நிதியமைச்சர் கே. என். சொக்ஸியினால்பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்வரவு செலவுத்திட்டத் தின் சாதக பாதக நிலைகள் குறித்து தத்தம் கருத்துக் களை பிரபலங்கள் சில பிரலாபிக்கின்றன.

**முன்னாள் நிதியமைச்சரும் இந்நாள் பாராளுமன்ற உறுப் பினருமான ரொனிடிமெல்:-**

தற்போது நாட்டில் சமாதானச் சூழ்நிலை உருவாகி வருகிறது. இதனால் பொது மக்கள் இந்த அரசாங்கத்தின் மீது புதுவிதமான நம்பிக்கை யொன்றை ஏற்படுத்தியுள்ளனர்.

இது போன்ற நம்பிக்கை யொன்றுடன், வரவு செலவுத் திட்டம் மூலம் தங்களுக்கு நிவாரணம் கிடைக்க அரசாங் கம் வாய்ப்பளிக்கும் என்று ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால், இந்த அரசாங் கமோ பொதுமக்களின் எதிர் பார்ப்புகள் மீது மண்ணை அள்ளிப் போட்டுவிட்டது. நாட்டு மக்கள் எதிர்நோக்கும் வாழ்க்கைச் செலவைக் குறைக்கவும், மேலதிக சுமைகளை அகற்றவுமே அரசாங்கம் தனது வரவு செல வுத் திட்டத்தை தயாரித் திருக்க வேண்டும்.

மக்களுக்கு மேலும் கஷ்டத் தைக் கொடுக்கவும், எதிர் பார்ப்புக்களை சிதறடிக்கவும் இந்த வரவு செலவுத்திட்டம் வழி வகுத்துள்ளது.

குறிப்பாக இன்று யுத்த செலவினங்கள் மிகவும் குறைந்துள்ளன. வெளிநாட்டு உதவிகளும் கிடைத்து வருகின்றன. இந்நிலையில் சம்பள உயர்வு, சலுகைகள் ஆகிய வற்றை பெற்றுக் கொடுத் திருக்க முடியும்.

**அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் தலைவர் அ. விநாயகமூர்த்தி:**

அரசின் வரவு செலவுத் திட்டத்தை நாங்கள் வரவேற் கின்றோம். அத்துடன், அது நல்ல முறையில் தயாரிக்கப் பட்டுள்ளது.

பாதுகாப்பு நிதியைப் பொறுத்தமட்டில், 320 மில் லியன் குறைக்கப்பட்டிருப் பது வரவேற்கத்தக்கதாகும். இந்நிதியை ஏனைய அபி விருத்திக்காகவும் பயன்படுத் தலாம்.

> இந்தச் சமாதான ஆண்டில் பொருளாதார சுபீட்சம் ஏற்படாவிட்டால் சமாதானத்தின் பயன்பாடென்பது மக்களுக்குப்போய்ச்சேராது என்பதை தெளிவுபடுத்தும் முகமாக பல்வேறு அம்சங்கள் இவ்வரவு செலவுத்திட்டத்தில் உள் ளடக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி அதிகமாக உள்ளதனால், அதிலிருந்து யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சைவ, கிறிஸ் தவ ஆலயங்களுக்கு இம்முறை யாவது நிதி வழங்கப்படும் என நம்புகின்றோம்.

அத்துடன் தனியார் மய மாக்கலை துரிதப்படுத்துவ தென்று அரசு உறுதியளித் துள்ளது இதுவும் வரவேற்கத் தக்க செயலாகும்.

**மலையக மக்கள் முன்னணி யின் தலைவரும் அமைச்சரு மான பெ. சந்திரசேகரன்.**

இவ்வருடவரவுசெலவுத்திட் டம் மக்களுக்குபோதியநிவார ணத்தைவழங்கவில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக இருந் தாலும், தற்போதையபொரு ளாதார நிலையில் இதைவிட அதிகமாக நாம் எதனையும் எதிர்பார்க்கமுடியாது.

இந்தக் காலகட்டத்தில் அர சும் விடுதலைப்புலிகளும் யுத்த நிறுத்தத்தை கைச்சாத்திட்டு, சமாதானம் நிலவும்வண்ணம் நாட்டில் அமைதி ஏற்பட எவ் வாறு நாம்வழி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோமோ, அதைப்போலவே பொருளா தாரத்தை கட்டியெழுப்புவ தற்கும் நாங்கள் தயாராக இருக்க வேண்டும்.

இன்று உலகில் முன்னேறிய நாடுகள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டாலும் சரி, யப்பான் போன்ற அணு குண்டால் பாதிக்கப்பட்ட நாடுகளை எடுத்துக் கொண் டாலும் சரி, அவை வல்லரசு நாடுகளுடன் பொருளாதா ரத்தில் போட்டியிடுகின்றன.

இதற்கு அந்நாட்டிலுள்ள மக்களின் அர்ப்பணிப்பும், சுறு சுறுப்பான செயற்பாடும், தியாகத்தோடுநாட்டை கட்டி யெழுப்ப வேண்டும் என்ற சிந்தனையுமே காரணங்க ளாக அமைந்தன.

**ஜனநாயக தொழிலாளர் காங் கிரஸின் பாராளுமன்ற உறுப் பினர் மனோகணேசன்**

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் இந்த வரவு செலவுத் திட்டம் சிறப்பான முன் னெடுப்புக்களுடன் இம்முறை பாராளுமன்றில் சமர்பிக்கப் பட்டுள்ளது.

சமாதானத்தை தேசிய மட் டத்திலே கொண்டு செல்லக் கூடிய அரசு சமாதானத்தின் வெளிப்பாடாக உள்ள பொரு ளாதார சுபீட்சத்தை மக்கள் முன் கொண்டு வருவதற்காக இவ்வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்திருக்கிறது.

இந்த சமாதான ஆண்டிலே பொருளாதார சுபீட்சம் ஏற் படாவிட்டால், சமாதானத் தின் பயன் பாடென்பது மக் களுக்கு போய்ச் சேராது என்பதை தெளிவுபடுத்தும் முகமாக பல்வேறு அம்சங்கள் இவ்வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு உள்ளது.

**தமிழர் விடுதலை கூட்டணி யின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன்**

இவ்வரவு செலவுத் திட்டம் சமாதானம் பொருளாதார முன்னேற்றம் ஆகிய இரண் டையும் வலியுறுத்தும் வரவு செலவுத் திட்டம் ஆகும்.

அத்துடன், தமிழர் தேசிய கூட்டமைப்பு இது குறித்து ஆராயும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

**பொதுஜன ஐக்கிய முன்னணி யின் பேச்சாளரும் பாராளு மன்ற உறுப்பினருமான சரத் அமுனுகம**

ஏழைகளுக்கு மேலும் சுமை களை ஏற்படுத்தும் வரவு செலவுத்திட்டத்தினையே ஐக் கிய தேசிய முன்னணி சமர்ப் பித்திருக்கிறது.

அரசாங்க ஊழியர்களுக்கு ஒய்வூதியம் வழங்குவதற்காக அவர்களின் சம்பளத்தில் இருந்து ஒரு பகுதி வெட்டப் படும் திட்டம் அமுல்படுத் தப்பட்டமை அரச ஊழியர் கள் மீது சுமையை ஏற்றும் செயல் ஆகும்.

**எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ**

பனை, தென்னை மரங் களுக்கும் வரி அறவிடும் அறி முக வரவு-செலவுத் திட்டம் இது வீதிகளைப் போக்கு வரத்துக்காக பாவிப்பவர் களும் வரி செலுத்த வேண் டிய கட்டாயத்திற்கு உட் படுத்தப்பட்டுள்ளனர்.

ஏழ்மையில் வாடும் பாமர மக்கள் தொழிலாளர் வர்க் கத்தை நிரந்தர ஏழைகளாக் கும் சிறப்பானபட்ஜெட் இது வாகும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் இந்த வரவு செலவுத் திட்டம் இந்த நாட் டுக்கோ மக்களுக்கோ விமோச னம் எதையும் பெற்றுக் கொடுக்காது. (உ–8)

## 25 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

அடுத்தஆண்டில் 25ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குவதற் கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக கல்விகலாசார மனிதவள அபி விருத்தி அமைச்சர் கருணா சேன கொடித்துவக்கு தெரி வித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் 5வருடகாலத்தில் புதிய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்த அரசுதீர்மானித் துள்ளதாகவும்:

தொழில்நுட்பத் தகவலை கற்பிப்பதற்கு ஆசிய அபிவிரு த்தி வங்கி 200 கோடிரூபா வை வழங்கியதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (உ-10)

## பட்ஜெட்டுக்கு எதிரான மனு வாபஸ்

(கொழும்பு)

இவ்வாண்டு வரவுசெலவுத் திட்டத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவைதாக் கல் செய்தநபரே வாபஸ் பெற்றுள்ளதாக சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா நேற்றுமுன்தினம் பாராளு மன்றத்தில் தெரிவித்துள் ளார்.

பாராளுமன்றம் சபாநாய கர் தலைமையில் நேற்று பிற் பகல் கூடிய சமயமே அவர் மேற்கண்டவாறு கூறினார். (உ-7)

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் நேர்முகத் தேர்வு

(கொழும்பு)

தற்பொழுது வெற்றிடமாக உள்ள ஏழுபிரதிப்பொலிஸ்மா அதிபர் பதவிகளும் விரைவில் நிரப்பப்படவுள்ளன.

இது தொடர்பான நேர் முகப்பரீட்சை நாளை சனிக் கிழமை அரச சேவை ஆணைக் குழுவில் இடம்பெறவுள்ள தாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் 35பேர் தகுதி பெற்றிருப்பதாகவும் தெரிய வருகின்றது. (உ- 7)

# இன்றைய கண்டனப் பேரணிக்கு பொது அமைப்புகள் பேராதரவு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிர பாகரனுக்கு, கொழும்பு மத் திய வங்கிக் குண்டு வெடிப்பு வழக்கில் 200 வருடங்கள் சிறைத்தண்டனை வழங்கி கொழும்பு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதைக் கண் டித்துஇன்று இடம்பெறவுள்ள ஆர்ப்பாட்டப் பேரணிக்கு பொது அமைப்புகள் பலவும் ஆதரவு தெரிவித்துள்ளன.

அவ் அமைப்புகள் விடுத் துள்ள ஆதரவு அறிக்கைகளின் விபரம் வருமாறு,

**யாழ்ப்பாண வணிகர் கழகம்**

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு 200 ஆண்டு கள்சிறைத்தண்டனை விதித்த இலங்கையின் நீதித்துறை கடந்த இருபது வருடம் தமிழ் மக்களின் சொத்துக்களை அழித்து தமிழ் மக்களைப் படு கொலைசெய்த இலங்கை அர சியல் தலைவர்களுக்கும் அதி காரிகளுக்கும் என்ன தண் டனை வழங்கப் போகிறது.

புரிந்துணர்வு உடன்படிக் கையின்பின் விடுதலைப் புலி களும் அரசும் சமாதான பேச்சுவார்த்தை மேசைக்கு வந்துள்ள தற்போதைய சூழ் நிலையில் இலங்கையின் நீதித் துறை தமிழீழ தேசியத் தலை வர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்கு200 ஆண்டுகள்சிறைத் தண்டனை விதித்த செயல் தமிழ் மக்க ளின் நெஞ்சங்களைப் புண் படுத்துகின்றது.

மத்தியவங்கித்தற்கொலைத் தாக்குதல் எவராலும்உரிமை கோரப்படாத சந்தர்ப்பத்தில் சந்தேகத்தின் பேரில் வழக்கு தொடரப்பட்டு அதில் வழங் கப்பட்ட தீர்ப்பே 200 வருட சிறைத்தண்டனை. இலங்கை சரித்திரத்தில் அதிசயிக்கத் தக்க விதத்தில் எமதுதேசியத் தலைவருக்கு 200 வருட சிறைத் தண்டனைகொடுத்து ஒட்டுமொத்த தமிழ்இனத்தை பழிவாங்கும் பேரினவாதத் தின் முகமூடியை பேரினவாதி கள் கிழித்துள்ளனர்.

எனவே எமதுதேசியத்தலை வருக்குஎதிரான தீர்ப்பைஆட் சேபித்துஇன்று நடத்தப்படும் பேரணியில் சகல வர்த்தகப் பெருமக்களும் தங்களின்வர்த் தக ஊழியர் சகிதம் கலந்து கொண்டு பூரண ஆதரவு வழங்க வேண்டுமென யாழ் வணிகர் கழகம் அன்பான வேண்டுகோள் விடுக்கின்றது.

**நல்லூர் பொது அமைப்புக்க ளின ஒன்றியம்**

தமிழீழ தேசியத் தலைவர் திரு.வேலுப்பிள்ளை பிரபா கரனுக்கு ஸ்ரீலங்கா மேல்நீதி மன்றம் 200 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தி ருப்பதை ஆட்சேபித்து இன்று வெள்ளிக்கிழமை நடைபெற வுள்ள ஆர்ப்பாட்டப் பேரணி யில் கூட்டுறவுத் துறையைச் சார்ந்தவர்கள் மட்டுமன்றி ஏனைய அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங் களைச் சார்ந்த அனைவரும் கலந்து கொள்ளவேண்டு மென கோருகிறோம்.

இது ஒரு நீதி மன்ற தீர்ப்பு என்று புறத் தள்ளிவிட்டு ஸ்ரீலங்கா அரசுவாய்முடி மௌனியாகஇருக்கமுடியாது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்புஇந்த வழக்கு எடுபடா மல்இருப்பதை அரசும் அதன் சட்டத்துறையும் பார்த்திருந் தால் இப்படியான ஒரு நீதி

(2ம் பக்கத் தொடர்ச்சி)

## இலங்கை-எகிப்து இணைந்து வர்த்தக உடன்படிக்கை

(கொழும்பு)

இலங்கையும்எகிப்தும் விரை வில் சுதந்திர வர்த்தக உடன் படிக்கை ஒன்றில் கைச்சாத் திடவுள்ளன.

வர்த்தக நுகர்வோர் விவ கார அமைச்சர் ரவி கருணா நாயக்க சமீபத்தில் எகிப்துக்கு விஜயம் செய்த போது இது தொடர்பான உடன்பாடு காணப்பட்டது.

அமைச்சர் ரவி கருணா நாயக்கா எகிப்தின் வெளியு றவு அமைச்சருடன் இது தொடர்பாக பேச்சுவார்த்தை களை நடத்தியுள்ளார்.

இதன் பிரகாரம் எகிப்தில் இருந்து வர்த்தக விவகாரங் கள் தொடர்பாக சிரேஷ்ட அதிகாரிகள் குழுவொன்றுஜன வரி மாதம் கொழும்பு வரவுள் ளது. (உ-8)

## உலக வங்கிக்குழு இன்று வவுனியா விஜயம்

(வவுனியா)

உலக வங்கிக்குழு இன்று வவுனியா மாவட்டத்துக்கு விஜயம் செய்யவுள்ளது.

உலகவங்கியின் நிதியுதவி யுடன் இம்மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட புனர் நிர்மாண கிராமிய திட்டங் களை நேரில் பார்வையிடும் நோக்குடனேயே இக்குழு அங்கு செல்லவுள்ளது.

மரக்காரம்பளை, காத்தார் சின்னக்குளம் ஆகிய கிராமங் களில் உலக வங்கியின் சுமார் 1கோடிரூபா உதவியுடன் பல்வேறு வேலைத் திட்டங் கள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், இப்புனரமைப் புக்களுடன் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் கலந்து கொள்ளும் மாநாட்டி லும் இவர்கள் இன்று கலந்து கொள்ளவுள்ளனர்.

பயனில பல்லார் முன் சொல்லல் நயனில நட்டார்கண்செய்தலி ்தீது

குறள்

# வலம்புரி

## செப்படி வித்தை

ஐ. தே. முன்னணி அரசின் இரண்டாவது வரவு செலவுத் திட்டம் நேற்று முன்தினம் நிதியமைச்சர் கே.என் சொக்ஸியினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு எதுவும் அறிவிக்கப்படவில்லை. மாறாக வரிச்சுமைகளும், கட்டண அறவீடுகளுமே வரவு செலவுத் திட்டத்தில் தொனிக்கின்றது.

இதில் வேடிக்கை என்னவெனில்; புதிய வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு கணிசமான சம்பள உயர்வு வழங்கப்படுமென வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் நிதி அமைச்சர் கே.என். சொக்ஸி செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார். அத்துடன், கடந்த பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் ஜனாதிபதி வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்து பிரதி நிதியமைச்சராக இருந்த பேராசிரியர் ஜி.எல்.பீரிஸிடம் கொடுத்துவிடுவார். பாராளுமன்றத்தில் வாசிக்கும் போதுதான் வரவுசெலவுத்திட்டத்தில் என்ன விடயங்கள் அடங்கியுள்ளதென்ற விபரம் பேராசிரியர் பீரிஸுக்குத் தெரியவரும். ஆனால் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் வரவு செலவுத் திட்டம் அப்படியல்ல. நிதியமைச்சராகிய என்னாலேயே அது தயாரிக்கப்பட்டது என்றும் அமைச்சர் கே. என். சொக்ஸி தெரிவித்திருந்தார்.


இதேவேளை பாராளுமன்றததில் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முதல் நாள் அது பற்றி கருத்துத்தெரிவித்த பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன அரச ஊழியர்களுக்கு சம்பள உயாவு வழங்கப்படமாட்டாது என்று குறிப்பிட்டார்.

நானே வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தேன் என்று கூறிய நிதியமைச்சர் சம்பள உயர் வழங்கப்படுமென்று கூற பிரதிநிதியமைச்சர் சம்பள உயர்வு வழங்கப்படமாட்டாது எனக் கூறியுள்ளாரெனில் பேராசிரியர் பீரிஸினது நிலைப்பாடே அமைச்சர் சொக்ஸியினதும் என்பது தெளிவாகின்றது.

இலங்கையில் என்.எம். பெரேராவுக்குப் பின்னர் வரவு செலவுத் திட்டம் வெறும் செப்படி வித்தை என்பது தெளிவு.

# திருப்பெரும் வடிவங்கண்டு தேறிய சூரன் மீண்டும்

# பேரிருள் வடிவத்தோடு போரினை நாடினான்



## வெள்ளி நற்சிந்தனை

வீரமகேந்திரப் போர்க்களத்தில் மாயைமைந்தன் புரியும் மாயங்கள் அளவிடற்கரியன, மந்திரிமார், மைந்தர் உடன் பிறந்தார், சுற்றத்தவர் சேனாதிபதிகள் -என்று இன்னோரன்னவரில் சூரனுக்குச் சார்பாகப் பேசியவர்கள் உண்டு, அவன் செயல் அநீதி என்று தருமத்தை எடுத்து உரைத்ததக்கோர்களும்உண்டு எவர்எதை எடுத்துஉரைத்தும் என்னசெஞ்சோற்றுகடன்அரச ஆணை, இரத்தபாச உறவிற்குக்கட்டுப்பட்டவர்கள் ஆதலினால்தருமத்தைஎடுத்துப்பேசினாலும் சூரபன்மனுடைய அநீதிக்குத் தலை தாழ்த்த வேண்டியவர்களானார்கள், ஒருவர்பின்ஒருவராகப்போர்க்களத்தில் உயிரிழந்தார்கள்.

### மாயைகள் மறைந்தன

தனி ஒருவனாகச் சூரபன்மன் நின்றும் முருகப் பெருமானுடன் போரையே விரும்பினான். நேராகநின்று நெடும்போர் ஆற்றும் வல்லமை அற்றவனாதலின் ஆயிரத்து எட்டு அண்டங்களிலும் ஓடி ஓடிச் சென்று மாயைப் போர்புரிந்தான், வேறு வேறு உருவங் கொண்டான். சக்கரவாளப் பறவையானான், பேயானான் பூதமானான்... புவி எங்குமானான். முருகபிரான் முன்பு அவன் மாயை எல்லாம் சூரியன் முன்னிலையில் பனிப் படலம் போலாயிற்று.

சூரபன்மன்ஆற்றாமையோடு தேவர்களை எங்கும் பார்க்கின்றான், கோபம் கொப்பளிக்கின்றது. முருகப் பெருமானுக்கும் தனக்குமிடையில் கொடும்போரை மூட்டி விட்டவர்கள் தேவர்கள். இந்தத் தேவர்களைக் கொன்று குவித்துத்தன்சினம் சிறிது தணித்து பின் முருகபிரானோடு போரைத் தொடங்கக் கருதுகின்றான்.

### திருப்பெரும் வடிவம்கொண்டார்

கந்தன் கருணை புரிகின்றார். இந்த உலகத்தில் நீ கொண்ட வடிவங்களை எல்லாம்அம்பினால்அழித்தோம்- அழிவிலாத நாம்பெருவடிவம் கொள்வோம், நன்று கண்டிடுதி என்று அண்ட புவனங்கள் அனைத்தும் ஆறுமாமுகத்து வள்ளல் மேனியில் அமைந்ததன்றி வேறில்லை என்னத் திருப் பெருவடிவங் கொண்டார்.

மலை, கடல், இடியேறு, நாள், கோள், வருணன், சூரியன், சந்திரன், முனிவர், வித்தியாதரர், வானோர் என்ற அண்ட புவனம் அனைத்தும் முருகப்பெருமானுடைய திருமேனியாகக் கொண்ட வடிவத்தைக் கண் களிப்ப, மனம் மகிழச் சூரபன்மன் காண்கின்றான். ஆதியும் அந்தமுமில்லாத அப்பெரு வடிவத்தைச் சூரபன்மன் கண்டு விம்மி தத்தனாகி நின்றான்.

''கோலமா மஞ்ஞைதன்னிற் ருலவிய குமரன தன்னைப் பாலனென் றிருந்தேன் அந்நாள் பரிசிவை உணர்ந்திலேன் யான் மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும் மூல காரணமாய் நின்றமூர்த்தி இம்மூர்த்தி அன்றோ''

என்றான்.

### பேரிருள் வடிவச் சூரன்

'எனது கால்கள் முருகப் பெருமானை வலம் வர வேண்டும், என் கைகள் முருகப் பிரானைத் தொழல் வேண்டும், தலை தாள்களைத் தாங்க வேண்டும், வாய் வாழ்த்த வேண்டும், என் தீமைகள் என்னைவிட்டு நீங்க வேண்டும். நான் இவர்க்கு அடிமையாக வாழுதல் வேண்டும். நெஞ்சம் மானத்தால் தடுகின்றது.'

முருகப்பிரான் ஆட்டுகின்றான், சூரன் ஆடுகின்றான். மெய்ஞ்ஞானத்தை வெளிப்படுத்தியபோது, ஞானம் பேசிய சூரன் முருகப்பெருமானுடைய மறைப்புச் சத்தியால் மீண்டும் அஞ்ஞானியானான். மெய்ஞ்ஞானம்- பொய்ஞ்ஞானமாகியது. சூரபன்மனுடைய ஆவேசம் தேவர்கள் பக்கம் திரும்பியது.

### தேவர்கள் புலம்பல்

சூரபன்மன் பேரிருள் வடிவம் கொண்டான் பெருவடிவம் கொண்டு தேவர்களை விழுங்க வருகின்றான். தேவர்கள் முருகப்பெருமானிடத்தில் தங்கள் அவலத்தைப் புலம்புகின்றார்கள்.

'நண்ணினர்க் கினியாய் ஓலம்
ஞான நாயகனே ஓலம்
பண்ணவர்க் கிறையே ஓலம்
பரஞ்சுடர் முதலே ஓலம்
எண்ணுதற் கரியாய் ஓலம்
யாவையும் படைத்தாய் ஓலம்
கண்ணுதற் பெருமான் நல்கும கடவுளே ஓலம் ஓலம்.

'சூரபன்மன் எங்களை விழுங்க வருகின்றான். ஓடவும் வலுவற்று நிற்கின்றோம். நாம் இனி எம்பெருமானே எவ்வாறு உய்வோம். எங்களைக் காத்தருள வேண்டும். காலம் தாழ்த்தாது எங்களைக் காத்தருள்' என்று விண்ணப்பித்தார்கள். தேவர்கள், அரசனும் சேர்ந்து சொன்னான்.

**சிவ. சண்முகவடிவேல்**

# சமாதானத் தீர்வு உடனடிச் சாத்தியமில்லை

# அரசு - புலிகள் நோர்வே ஒருமித்த கருத்து

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை மிகவும் சிக்கலானது. நாம் இன விடுதலைக்கான யுத்தத்தை கடந்த 20 வருடங்களாக நடத்தியிருக்கிறோம். இத்தகைய மிகநீண்டதும், சிக்கலானதுமான பிரச்சினைக்குதிடீரென்று தீர்வு கண்டுவிட முடியாது. இதற்கென ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியை வரையறை செய்து அறிவிக்கவும் முடியாது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தாய்லாந்தின் பேச்சுக்கள் முடிந்த பின்னர் செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

இதனையே அரசுதரப்புப் பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவர் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் வலியுறுத்தியுள்ளார்..

பாலசிங்கம் கூறியவற்றுடன் நான் உண்மையிலேயே உடன்படுகின்றேன். இந்த விடயத்தின் வரலாற்றையும், அதன் சிக்கலான தன்மையையும் பார்க்கையில், இதனை சில வாரங்களிலோ, அல்லது மாதங்களிலோ தீர்த்து விட முடியாது. ஆனாலும் ஒவ்வொரு கட்டத்திலும் நாம் உருப்படியான பெறு பேறுகளை அடைந்து விட்டதை உறுதிசெய்து கொள்ளுதல் வேண்டும் என்றும் பீரிஸ் தெரிவித்தார்.

இதே வேளை நோர்வே வெளியுறவு அமைச்சர் ஹெல்கீசன் சமாதான பேச்சுக்களுக்கு கால எல்லை வகுப்பதானது சாத்தியமானதல்ல, எனத் தெரிவித்துள்ளார். கடந்த ஒரு தசாப்த காலத்திலுள் நடைபெற்ற மத்திய கிழக்கு, வட அயர்லாந்து பால்க்கன் போன்றவற்றின் சமாதானப்பேச்சுக்கள் யாவும் நீண்ட காலம் எடுத்ததை அனைவரும் அறிவர். ஒரு வருடமோ பத்துவருடங்களோ எடுப்பினும் நல்லதொரு தீர்வே முக்கியமானது என்று ஹெல்கீசன் தெரிவித்துள்ளார்.

ஆனால், முதற் சுற்று சமாதானபேச்சுக்கள் நடைபெற்ற வேளை, ஜனாதிபதியும் அவரது ஆலோசகர் லக்ஸ்மன் கதிர்காமரும் கட்டங்கட்டமான அணுகுமுறையை கடுமையாக விமர்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(இ)

## தினசரி தியானம்

### குருதத்துவம்

குருவே தெய்வம். அவரைச் சாதாரண ஒரு மனிதனாக எண்ணிவிடக் கூடாது; அவர் புண்ணிய ஸ்தலம்; குருவே உலகம். பிரம்மன், விஷ்ணு, சிவன் அனைத்துத் தேவர்களும் மற்றும் அனைத்துப் புண்ணிய நதிகளும் குருவின் உடலில்தான் அழிவற்றிருக்கிறார்கள், எவர் ஒருவர் எண்ணம், சொல், செயல்களினால் தூய்மை உடையவராக இருக்கிறாரோ எவர் ஒருவர் கடவுளை உணர்ந்திருக்கிறாரோ, அவரே குரு நாதராவார்;

சுவாமி சிவானந்தர்

# கமக்காரர் பாவனைக்கு சூடடிக்கும் இயந்திரம்

(ஊர்காவற்றுறை)

புளியங்கூடல் விவசாயிகள் சம்மேளனத்திற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் சூடடிக்கும் இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது;

மேற்படிசூடடிக்கும் இயந்திரம் வழங்கல் நிகழ்வு நேற்று புளியங்கூடல் நெசவு மண்டபத்தில் இடம் பெற்றது;

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியிடம் இருந்து வைபவ ரீதியாக புளியங்கூடல் விவசாயிகள் சம்மேளனத் தலைவர் க. சற்குணம் இதனைப் பெற்றுக் கொண்டார்;

மேற்படி சூடடிக்கும் இயந்திரம் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு அறுவடையின் போது சுழற்சி முறையில் இலவசமாக பாவிப்பதற்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(உ-75)

## நீதிமன்றத் தீர்ப்.....

இக்கண்டனப் பேரணியில், குடா நாட்டு மக்கள் அனைவரையும் அலை அலையாகத் திரளுமாறு, பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சூ.சிறில் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார். இதே வேளை பேரணியில் கலந்து கொள்ளும் பொதுமக்களை ஏற்றி வரும் வாகனங்கள், யாழ் பிறவுண் வீதி வழியாக வருகை தருமாறும் கேட்கப்பட்டுள்ளது.(இ)

## க.பொ.த (சா)....

ஆங்கிலம், சமயம் ஆகிய பாடங்களுக்கான பரீட்சை, எதிர் வரும் 15ந் திகதி நடைபெறும் என்றும், ஏனைய பாடங்களுக்கான பரீட்சைகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நேர அட்டவணைப்படி நடைபெறும் என்றும் யாழ் வலயம் தெரிவித்துள்ளது.

(இ-6-16)


❋ நிரந்தர சமாதானத்தை நோக்கிய பேச்சுவார்த்தை, சுயநிர்ணய உரிமை அடிப்டையிலான சுயாட்சி தீர்வை வலியுறுத்தி

❋ அந்நிய நலன்களுக்கான தலையீடுகளை நிராகரித்து

ஏகாதிபத்திய உலகமயமாதல- தாராளமயம் - தனியார மயத்தை எதிர்த்து- உழைக்கும் மக்கள் மீதான சகல ஒடுக்கு முறைகளையும் எதிர்த்து - அமெரிக்காவின் உலக ஆதிக்கப்போர்வெறியை அம்பலப்படுத்தி

**புதிய ஜனநாயக கட்சியின் 4வது தேசிய மாநாட்டை யொட்டிய**

**பொதுக்கூட்டம்**

இடம : **யாழ் -''சிற்றி ஹோல்'' மண்டபம்**
(வின்சர் சந்திக்கு அருகாமையில் ஜ்ம்மா 'பள்ளிவாசல் ஒழுங்கை)

காலம் : **நாளை (09.11.2002) சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு**

**தலைமை**

**தோழர் சி.கா.செந்திவேல்**
(பொதுச் செயலாளர். புதிய - ஜனநாயக கட்சி)

**உரையாற்றுவோர்**

**தோழர்கள்**

- **இ.தம்பையா - சட்டத்தரணி**
(தேசிய அமைப்பாளர் புதிய ஜனநாயக கட்சி)
- **சோ.தேவராஜா - சட்டத்தரணி**
(அரசியல் குழு உறுப்பினர் புதிய ஜனநாயக கட்சி)
- **க.தணிகாசலம்**
(அரசியல் குழு உறுப்பினர் புதிய ஜனநாயகக் கட்சி)
- **எஸ்.இராஜேந்திரன்**
(மலையக பிரதேச செயலாளர் புதிய ஜனநாயகக் கட்சி)
- **கா.கதிர்காமநாதன்**
(வட பிரதேச செயலாளர் புதிய ஜனநாயக கட்சி)
- **எஸ்.பன்னீர்செல்வம்**
(மத்திய குழு உறுப்பினர் புதிய ஜனநாயக கட்சி)
- **மு.தியாகராஜா**
(புதிய ஜனநாயக கட்சி. வட பிரதேசம்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

**யாழ்ப்பாணம் புதிய ஜனநாயக கட்சி**

(6172)


## சமாதான முயற்சிக்கு தடையாயின்.......

இடைக்கால நிர்வாக சபை அமைப்பது தொடர்பான விடயம் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டையாக இருக்குமானால் இடைக்கால நிர்வாக சபை அமைப்பது தொடர்பான யோசனையை கைவிடுவதற்கு அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் நடந்து முடிந்த தாய்லாந்துப் பேச்சுவார்த்தையில் இணக்கம் கண்டுள்ளனர்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் டிசம்பர் மாதம் 2ம் திகதிமுதல் 5 திகதி வரை நடைபெறவுள்ள மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு முன் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளேன்

பல்வேறு நாடுகளில் நடைமுறையிலிருந்து வரும் அரசியல் அமைப்புகள் தொடர்பாக நானும் அன்ரன் பாலசிங்கமும் அந் நாடுகளுக்குச் சென்று ஆராய்ந்து முடிவுகளை எடுக்கவுள்ளோம். இந்த முடிவுகள் அறிக்கை மூலம் டிசம்பர் மாதம் ஒஸ்லோவில் நடை பெறவுள்ள மூன்றாம்சுற்று பேச்சுவார்த்தை யில் சமர்ப்பித்து விவாதத்திற்குப் பின் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

### ரணில-பாலசிங்கம் ஒஸ்லோவில் சந்திப்பு

இம்மாதம் 25ம் திகதி நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோ வில் நடை பெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத் திற்கு பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா செல்லவுள்ளார். அங்கு அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து வடக்குக் கிழக்கு அபிவிருத்திக்கு உதவிடுமாறு உலக நாடுகளைக் கேட்கவுள்ளனர். இதன்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இம்மாநாட்டில் அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஆமி டேஜ் மற்றும் அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஜப்பான் உட்பட இருபது நாடுகளின் பிரதி நிதிகள் கலந்து கொள்ளவுள்ளார்கள் எனவும் அமைச்சர் பீரிஸ் தெரி வித்தார். (ம)

## எதிர்க் கட்சிகளின்..

அரசாங்கக்கட்சி உறுப்பினர்களின் பொறுப்பாகும். இருந்த போதிலும் இந்தப் பொறுப்பை தற்போதய அமைச்சர்கள் நிறைவேற்றுவதில் லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விவாதத்தின் போது அரசாங்கக்கட்சி உறுப்பினர்களைக் கட்டுபடுத்துமாறு ஆளும் கட்சி பிர தான அமைப்பாளர் மகிந்த சமரசிங்காவை சபாநாயகர் கேட்டுக் கொண்டார்.

வரவு செலவுத்திட்ட விவாதத்திற்கான நேரம் ஒதுக்கப்பட் டுள்ளது. இதன் காரணமாக இருதரப் பு பிரதிநிதிகளும் அமை தியா ன முறையில் விவாதம் செய்ய வாய்பளிக்கப்பட்டுள்ளது எனவும் சபாநாயகர்சுட்டிக் காட்டியுள்ளார்.

(உ-8)


## கூறுவிலை விற்பனை (Sealed Tenders)
### வட பிராந்திய போக்குவரத்து சபை

வட பிராந்திய போக்குவரத்து சபையின் பேருந்துகளில் இருந்து கழிக்கப்பட்ட பின்வரும் பொருட்கள் கூறுவிலை விற்பனைக்காக கோண்டாவில், காரைநகர் சாலைகளில் விடப்பட்டுள்ளன.

பேருந்துகளின் அடிச்சட்டம், பின் முன் அக்சில்கள், பின் முன் பிறேக்றம், வீல்றிம், சீற்பிறேம், அலுமினியம், உடைந்த வில்லுத்தகடுகள், இரும்பு வகைகள், ரயர், ரியூப், பிளப் ஆகிய பொருட்களாகும்.

மேலே கூறப்பட்ட பொருட்களை கொள்வனவு செய்ய விரும்பு வோர் 25.11.2002இன் பின்னர் பலாலி வீதியில் அமைந்துள்ள வட பிராந்திய போக்குவரத்து சபையின் கோண்டாவில்சாலையிலும், 11.11.2002இன் பின்னர் காரைநகர் சாலையிலும வேலை நாட்களில (சனி, ஞாயிறு தவிர்ந்த) காலை 9.30 மணிமுதல் மாலை 4.00 மணிவரை பார்வையிட அனுமதிக்கப்படுவர். மேலும் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக ரூ1000/=உம் மீளளிக்கக்கூடிய வைப்புத தொகையாக ரூபா 25000/=உம் எமது பிராந்திய கணக்காளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும். தங்கள் கூறுவிலைக் கோரிக்கைகளை அனுப்புவதற்கான விண்ணப்பப் படிவங்களை பலாலி வீதியில் அமைந்துள்ள வட பிராந்திய போக்கு வரத்து சபையின் தலைமைக்காரியாலயத்தில் உதவி விநியோக உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ளலாம். காரைநகர் சாலையில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை விண்ணப்பப் படிவங்களை 30.11.2002க்கு முன்னரும், கோண்டாவில் சாலையில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை விண்ணப்ப படிவங்களை 18.12.2002க்கு முன்னரும் தலைவர், கூறுவிலைச் சபை, வ.பி.போ.ச பலாலி வீதி கோண்டாவில் சாலை என முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இப் பொருட்கள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்கப்படமாட்டாது. பொருட்களின் பெறுமதியின் 25%ற்குரிய பணம் உடன் செலுத்தப்படுவதுடன் மிகுதிப் பணம் ஒரு வார காலத்தினுள் செலுத்தப்பட்டு இக் காலப் பகுதியில் பொருட்கள் எடுத்துச் செல்லப்படல் வேண்டும்.

வ.பி.போ.ச
கோண்டாவில்
08.11.2002 [C/5224]

தலைவர்,
கூறுவிலைச் சபை


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிதலும்

அன்னை மடியில்
25
01
1936



ஆண்டவன் அடியில்
09
10
2002

காரைநகர் வலந்தலை நடுத்தெருவை பிறப்பிடமாகவும், நாவலர் வீதியை வசிப்பிடமாகவும், தற்போது பொஸ்வல் பிளேஸ் வெள்ளவத்தையில் வசித்தவருமான அமரர் சிவபாக்கியம் குமாரசாமி அவர்களின் இறுதிக் கிரியைகளில் நேரடியாகக் கலந்து கொண்டோருக்கும், தந்தி மூலமும், தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியோருக்கும் இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துகொள்கின்றோம்.

அத்துடன் 8.11.2002 வெள்ளிக்கிழமை (இன்று) நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவால் வாடும்

**அமரர் திருமதி சிவபாக்கியம் குமாரசாமி**

11A பொஸ்வெல் பிளேஸ்
வெள்ளவத்தை
கொழும்பு 6
தொலைபேசி 360659

கணவர்
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

(6166)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில்08.11.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.